வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 05.11.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 335 | பக்கங்கள் : 16



## 12 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை

### 6,034 பேர் பாதிப்பு

கொழும்பு, நவ. 05

நாட்டில் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது. இருவர் காயமடைந்துள்ளனர். அத்துடன், 6 ஆயிரத்து 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம், மண் சரிவு மற்றும் மின்னல் தாக்கத்தாலேயே மேற்படி உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, கண்டி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பதுளை, புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஆகிய 12 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை நிலவுகின்றது.

ஆயிரத்து 504 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடுகள் முழுமையாக வும், 432 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

# இலங்கையில் இராணுவ தளம் சீனா பரிசீலனை



## அமெரிக்க படை தலைமையகம் அறிக்கை

வாஷிங்டன், நவம்பர் 05

இலங்கையில் இராணுவ தளம் ஒன்றை அமைக்க சீனா பரிசீலித்து வருகின்றது என்று அமெரிக்காவின் படைத் தலைமையகமான பென்ரகன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன மக்கள் குடியரசை உள்ளடக்கிய இராணுவம் மற்றும் பாதுகாப்பு அபிவிருத்தி என்ற தலைப்பில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## கனேடிய பிரதமர் தீபாவளி வாழ்த்து!

மொன்றியல், நவ. 05

கனடாவிலும் மற்றும் உலகம் முழுவதும் தீபாவளியைக் கொண்டாடும் அனைவருக்கும் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தில் மேலும் தெரிவிக்கப்பட் 15

## மக்களை திருப்திப்படுத்துவதே அரசாங்கத்தின் ஒரே நோக்கம்!

### இராஜாங்க அமைச்சர் விதுர கூறுகிறார்

வவுனியா, நவ. 05

மக்களை திருப்திப்படுத்துவது மற்றும் மக்களை சந்தோசப்படுத்துவது தொடர்பில் நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும் என தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரி 15

## அமெரிக்க நிறுவனத்துடன் இலங்கை மிகவும் மோசமான தேசத்துரோக செயல்

### அரசு மீது சம்பிக்க கடும் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 05

“கெரவலப்பிட்டி ‘யுகதனவி’ மின்னுற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகளை வழங்குவது தொடர்பில், அமெரிக்க நிறுவனத்துடன் இலங்கை கைச்சாத்திடப்பட்டிருக்கும் ஒப்பந்தமானது மிக மோசமான தேசத்துரோக செயல்பாடாகும். இதனால் எமது நாடு அமெரிக்காவின் மின்சார மாபியாவுக்கு பலியாக நேரிடும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா 15

## மேலும் 15 பேர் கொரோனாவால் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 05

நாட்டில் மேலும் 15 பேர் கொவிட் தொற்றால் மரணித்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 08 ஆண்களும், 07 பெண்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன் தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத் 15

## மட்டக்களப்பு சரணாலயத்துக்குள் திடீரென முளைத்த படை முகாம்!



மட்டக்களப்பு, நவ. 05

மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்தியில் உள்ள மாந்தீவு பறவைகள் சரணாலயத்துக்குள் புதிதாக படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மாந்தீவு சரணாலயத்துக்குள் மட்டக்களப்பு போதனா 15

## ஞானசாரர் தலைமையிலான செயலணியை இரத்து செய்க!

### கத்தோலிக்க ஆயர் பேரவை கோரிக்கை

கொழும்பு, நவ. 05

சட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்படாமல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியினால், ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற நோக்கத்தை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அற்றுப்போயுள்ள 15

## கராப்பிட்டி வைத்தியசாலையில் 24 பேருக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, நவ. 05

காலி, கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனையின்போது 24 பேருக்கு கொரோனா 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்பேசும் மக்களின் கட்சிகளின் கூட்டம் குறித்து நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நண்பர் ஒருவர் தொடர்புகொண்டு, பதின்மூன்றை தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து அமுல்படுத்த இந்தியாவை வலியுறுத்தவேண்டும் என்று இந்தப் பத்தியில் பலதடவை குறிப்பிட்ட ஊர்க்குருவியர், அந்த கூட்டத்தை கண்டிப்பதுபோல எழுதியிருப்பது ஏன் என்று எகிறினார்.

உண்மைதான், பதின்மூன்றையும் தமிழர்கள் பறிகொடுத்துவிடக்கூடாது என்பது பலரின் ஆதங்கமாக இருந்துகொண்டிருக்கின்றது உண்மைதான்.

அதற்காக ரெலோ அவசர அவசரமாக ஒரு கூட்டத்தைக் கூடடியது ஏன் என்று தெரிந்துகொண்ட பின்னரும் அதனை ஆதரிக்கமுடியவில்லை என்று அவருக்கு விளக்கமளித்தேன்.

கூட்டமைப்பில் இதுவரைகாலமும், அனைத்து விடயங்களையும் சம்பந்தன் அன்கோ தன்னிச்சையாக செய்துவருவது குறித்து இந்தப் பத்தியில் பலதடவைகள் குறிப்பிட்டிருக்கின்றோம்.

கடந்த பத்து வருடங்களாக சம்பந்தனும் சுமந்திரனும் அவ்வாறு தன்னிச்சையாக பல காரியங்களைச் செய்து வந்ததுதான், கூட்டமைப்பின் கடந்த கால தோல்விகளுக்கு காரணம் என்பதையும் இந்தப்பத்தியில் பல தடவை குறிப்பிட்டிருக்கின்றோம்.

கூட்டமைப்பு - ஒரு கூட்டு அமைப்பாக இயங்க வேண்டும் என்பதையும் இந்தப் பத்தியில் பலதடவை குறிப்பிட்டிருக்கின்றோம்.

அரசாங்கத்துடன் கூட்டமைப்பு அண்மையில் அமெரிக்க தூதுவரின் ஏற்பாட்டில் பேச்சு நடத்திய போது, அவ்வாறு பேச்சு நடத்துவது தவறு அல்ல, ஆனால் அதுகுறித்து குறைந்த பட்சம் கூட்டமைப்பில் உள்ள பங்காளிக்கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து அதன் பின்னர் பேசுவதே சரியானது என்றும்,

அதிகம் ஏன், கடைசியாக சுமந்திரன் விவசாயிகள், மீனவர்களுக்காக போராட்டங்களை நடத்தியபோதும், அது குறித்து பங்காளிக்கட்சிகளுடன் கலந்துபேசி செய்திருக்கலாம் என்றும்,

இதுபோலவே பல்வேறு விடயங்களையும் சுமந்திரன் மற்றவர்களுடன் கலந்து பேசிச் செய்வதில்லை என்பதே, பங்காளிகள் அவர் மீது முன்வைக்கும் பிரதான குற்றச்சாட்டு.

சுமந்திரன் மீது எந்தவகையான குற்றச்சாட்டுக்களை இதுவரை சுமத்தி வருகின்றோமோ அதே தவறை ரெலோவும் செய்ய முன்படுவது தவறான முன் உதாரணம் ஆகிவிடும்.

பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியாவை வலியுறுத்துவதற்காக என்று கூட்டப்பட்ட அந்தக் கூட்டம், பின்னர் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களால் எவ்வாறு அவர்களின் அரசியல் தேவைகளுக்காக மாற்றப்பட்டதோ அதேபோல, கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் மூன்றும் முதலில் கூடிப்பேசி, கடைசியாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளை முன்வைப்பதற்காகவே கூட்டம் கூட்டப்படுவதாக ஆரம்பத்திதலேயே கூறப்பட்டிருந்தால்,

அது ரெலோவின் ஏற்பாடாக அல்லாமல் கூட்டமைப்பின் ஏற்பாடாக கூட்டம் கூட்டப்பட்டிருந்தால், இன்னும் சிறப்பாக நடந்திருக்கும் என்பதுடன், இன்னும் சிறப்பான அரசியல் கவனத்தைப் பெற்றிருக்கும் என்பதே இந்தப் பத்தியின் நோக்கம் என்று அந்த நண்பருக்கு விளக்கவேண்டியிருந்தது.

விக்னேஸ்வரன் மட்டுமல்ல (அந்தக் கூட்டத்திற்கு தனது சீடர்களில் ஒருவரை அனுப்பியிருந்தார்), கஜேந்திர குமார் கூட அந்தக் கூட்டத்தை தவிர்திருக்க முடியாத நிலையை கூட்டமைப்பு ஏற்படுத்தியிருக்கலாம்.!

**- ஊர்க்குருவி.**

## பன்டோரா ஆவணம் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, நவ. 05

பிரபல செல்வந்தர்களின் இரகசிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பண்டோரா ஆவணத்தில் வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் குறித்து முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசாரணை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் அப்சரா கல்தேரா தெரிவித்தார்.

திருக்குமார் நடேசனின் வங்கி நடவடிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, பண்டோரா பேப்பர்ஸ் ஆவணத்தில் வெளியாகிய விடயங்கள் தொடர்பில், சிறையிலுள்ள ரஞ்சன் ராமநாயக்கவிடம் வாக்குமூலமொன்றை பெறுவதற்கு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்த கோரிக்கைக்கு இணங்கவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## அரசின் அனுமதியின்றி மதுபானம் விலை உயர்வு

கொழும்பு, நவ. 05

மதுவரி திணைக்களத்தின் அனுமதியின்றி மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் மதுபான உற்பத்தி நிறுவனங்களிடம் உடனடியாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி கோரியுள்ளார்.

அரசாங்கத்தின் அனுமதியின்றி மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டால் அது தொடர்பில் மதுவரி திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

மூலப்பொருட்களின் விலையேற்றம் காரணமாக மதுபானங்களின் விலைகளை அதிகரிக்க நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக நம்புவதாகவும், அத்தகைய விலை அதிகரிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் மதுவரித் திணைக்களம் வசம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மதுபானங்களின் விலை அதிகரிப்பை வரி அதிகரிப்பின் ஊடாக நிதி அமைச்சு மேற்கொள்வதாகவும், இம்முறை நிதியமைச்சோ அல்லது மதுவரித் திணைக்களமோ அறியாத வகையில், மதுபான விலைகள் அதிகரித்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## 05 கார்த்திகை 2021

**“எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்”**

**- லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)**

### கல்வி tv CHANNEL-1 — 05.11.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி tv CHANNEL - 2 — 05.11.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
05.11.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## யாழ்ப்பாணம் என்றால் - படித்தவர்கள்!

வடக்கின் அரசியல் பரப்பு விசித்திரமாக இருப்பதை, மீண்டுமொரு முறை தான் அறிந்து கொண்டார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார். சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தமிழ் தேசிய கட்சிகளின் சந்திப்பில் பங்கு கொண்டதன் பின்னரே அவர் இந்த கருத்தை வெளியிட்டிருக்கின்றார். 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒன்றுபட்டு வலியுறுத்துவது தொடர்பில் தமிழ் தேசியத்தை பிரதிநித்துவம் செய்யும் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி ஆராய்ந்திருந்தன. இந்த சந்திப்பு தொடர்பில் ஒரு சிறு குழு சில விமர்சனங்களை முன்வைத்திருந்தது. இது தொடர்பில் கருத்துக் கூறியபோதே, மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

13 ஆவது திருத்தச்சட்டம் - இந்தியா என்னும் சொற்களை கேட்டவுடன் தடுமாறும் ஒரு சிறு குழுவினர், கடந்த இரு வாரங்களாக தங்களது தடுமாற்றத்தை உச்சளவில் வெளிப்படுத்தியிருந்தனர். ஏன் இவர்கள் இந்தளவு தடுமாற வேண்டும்? இதற்கு என்ன காரணம்? இவர்களை இயக்கும் சக்திகள் யார்? இத்தனைக்கும் இவ்வாறு தடுமாறியவர்கள் எவருமே கடந்த காலத்தில் எதனையும் சாதித்தவர்களல்லர்.

இப்படியானவர்களே, தமிழ்கட்சிகள் - இந்திய அமெரிக்க நலன்களுக்காகவே, 13 தொடர்பில் பேசுவதாக கூறிவருகின்றனர். புலம்பெயர் சூழலிலுள்ள சிலரும் இதற்கு சாமரம் வீசுகின்றனர். ஆனால் நிதானமான பெரும்பான்மையான தமிழ் - புலம்பெயர் சமூக அமைப்புக்கள் அனைத்துமே தாயகத்தில் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை ஆதரிக்கின்றன. எத்தகைய முடிவாக இருப்பினும் அது தாயகத்திலிருந்துதான் முன்வைக்கப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் தெளிவாக இருக்கின்றனர். ஆனால் ஒரு சில குழுக்களே இந்திய எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து வருகின்றன. தாயகத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்தையும் வேறு எவருக்காகவோ முன்னெடுப்பது போல் அறிவுக்கு முரணான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். ஆரோக்கியமான விமர்சனங்கள் அரசியலை செம்மைப்படுத்தும் ஆனால், அறிவற்ற வெளிப்பாடுகள் மக்களை குழப்பி - மக்களை மக்களுக்கு எதிராகவே சிந்திக்கத் தூண்டும்.

இந்தியா ஒரு பிராந்திய சக்தி - அமெரிக்கா ஒரு உலக சக்தி. பிராந்திய சக்தியான இந்தியாவின் நலன்களை எவ்வாறு 13ஆல் பாதுகாக்க முடியும்? உலக அதிகாரமான அமெரிக்காவிற்கு இதனால் என்ன நன்மை கிடைக்கப் போகின்றது? உண்மையில் இந்தியாவினதும், அமெரிக்காவினதும் ஆற்றலை தெரிந்தவர்கள் ஒரு போதுமே இவ்வாறு கூறமாட்டார்கள்.

யாழ்ப்பாண சமூகம் என்றாலே ஒரு காலத்தில் தனி மரியாதை இருந்தது. யாழ்ப்பாணம் தொடர்பில் பேசுகின்ற போதே - 'அவங்கள் படிச்ச ஆட்கள்' என்னும் புரிதல்தான் முதலில் வெளிப்படும். ஆனால் இன்று யாழ்ப்பாணத்தை பார்த்து மற்றவர்கள் கொடுப்புக்குள் சிரித்துக் கொள்ளும் நிலைமை உருவாக்கியிருக்கின்றது. அந்தளவிற்கு அறிவுக்கு முரணான கருத்துக்கள் வெளிவருகின்றன.

சர்வதேச அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கதைகள் புனையப்படுகின்றன. அகப்பட்ட மாட்டுக்கு குறி சுடுவது போல், எடுத்தற்கெல்லாம் இந்தியா, அமெரிக்க என்று கூறப்படுகின்றது. அறிவுபூர்வமான கருத்துக்களை முன்வைப்பவர்களை இந்தியாவின் - அமெரிக்காவின் கைக் கூலிகளென்று சாதாரணமாக கூறிவிட்டு கடந்து செல்லும் போக்கு அதிகரித்திருக்கின்றது. மக்களை ஒரு வகையான மாயைக்குள் வைத்துக் கொள்வதே தங்களுக்கு வசதியானதென்று நம்பும் ஒரு சிறு கூட்டம் எல்லாவற்றையுமே தங்களால் குழப்பமுடியுமென்று நம்பும் அவலநிலையொன்று உருவாகிவிட்டது. இது மிகவும் ஆபத்தானது. ஒரு சிறந்த எதிர்காலத்திற்கு இது உகந்ததல்ல. மக்களை - மக்களுக்கு எதிராக திருப்பும் செயல்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பாதிக்கப் போவதும் மக்களாக மட்டுமே இருக்கும்.

## ஷிப் நெருக்கடி:

# உலகத்தை அச்சுறுத்தும் தொழில்நுட்பச் சிக்கல்



பண்டிகைக் காலத்தில் தொழில்நுட்பக் கருவிகளை ஏற்கனவே வாங்காதவர்களுக்கு அவை சரியான நேரத்தில் கிடைக்காமல் போகலாம் என்று உலகின் தலைசிறந்த சிப் வடிவமைப்பு நிறுவனத்தின் அதிபர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

ஷிப் நிறுவனமான ARM-இன் தலைமை நிர்வாகி சைமன் செகர்ஸ், தயாரிப்புக்கும் தேவைக்கும் இடையிலான இடைவெளி இதுவரை கண்டிராத "மிக தீவிரமானது" என்று கூறுகிறார்.

இதற்கு முன் எப்போதும் இல்லாத இந்த நெருக்கடி 2022ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் சரி செய்யப்பட வாய்ப் பில்லை என்று அவர் கணிக்கிறார். சில நேரங்களில் ஷிப் எனப்படும் மின் சுற்று அட்டைக்கான காத்திருப்புக்கு 60 வாரங்கள் வரை ஆகக்கூடும் என்கிறார் அவர்.

உலக அளவில் கிறிஸ்மஸுக்கு இன்னும் 50 நாட்களே உள்ள நிலையில் தொழில்நுட்ப உலகம் நெருக்கடியில் இருக்கிறது.

போத்துக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பனில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளை சைமன் எச்சரித்தார். "உங்கள் எல்லா சாதனங்களையும் இன்னும் வாங்கவில்லை என்றால், நீங்கள் ஏமாற்றமடையலாம்" என்று அவர் கூறினார்.

**இதற்கு முன் இப்படி எப்போதும் இருந்ததில்லை**

ARM நிறுவனத்தின் ஷிப்கள் தான் உலகின் பல திறன்பேசிகளில் (ஸ்மார்ட்போன்களில்) பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிறுவனம் பிரிட்டனின் NVIDIA நிறுவனத்தால் கடந்த செப்ரெம்பரில் வாங்கப்பட்டது.

ஆனால் இந்த கையகப்படுத்தும் உடன்பாடு இப்போது ஐரோப்பிய போட்டி விசாரணையின் கீழ் இருக்கிறது. ARM தொழில்நுட்பம் தாராளமாகக் கிடைப்பதைக் கட்டுப்படுத்தும் என்விடியா நிறுவனம் எதை யும் செய்யும் என்று நிபுணர்கள் கவலைப்படுகிறார்கள்.


> **இதற்கு முன் எப்போதும் இல்லாத இந்த ஷிப் நெருக்கடி 2022ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் சரி செய்யப்பட வாய்ப்பில்லை என்று கணிக்கப்படுகின்றது. சில நேரங்களில் ஷிப் எனப்படும் மின்சுற்று அட்டைக்கான காத்திருப்புக்கு 60 வாரங்கள் வரை ஆகக்கூடும் என்றும் சொல்கின்றார்கள்.**

**பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது**

இந்தச் சிக்கல் ஏற்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் கொரோனா தொற்றுதான் என்கிறார் சைமன். தொற்று நோய் பாதிப்பின்போது இதற்கு முன் இல்லாத அளவுக்கு மாறுபட்ட பல கருவிகளின் தேவை ஏற்பட்டது. பொது முடக்கம் அமுலில் இருந்த காலத்தில் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதற்கு மக்கள் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தினர். குழந்தைகள் வீட்டில் இருந்தே கல்வி கற்க நேரிட்டது. இதற்கெல்லாம் புதிய கருவிகள் தேவைப்பட் டன என்று இந்தச் சிக்கல் குறித்து சைமன் விளக்குகிறார்.

மேலும் கார்களுக்கான திடீர் தேவை அதிகரிப்பு, ஆசியா மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான புவிசார பதற்றங்களும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. 5G இன் வெளியீடு, Huawei மீதான அமெரிக்கத் தடைகள் உள்ளிட்டவையும் இந்த நெருக்கடிக்குக் காரணிகள் என்று சுட்டிக் காட்டப்படுகின்றன. - பி.பி.சி.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உறவினர் சந்திப்பு உண்டு. நல்லவர் உதவியால் நல்ல பலன் பெறுவீர்கள். காலையில் நல்ல செய்தி வந்து சேரும். புதிய விஷயம் ஒன்றை பற்றிய முயற்சியில் நம்பிக்கை ஏற்படும்.

**இடபம்**
திருப்தியான நாள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தீயவழியில் அழைத்துச் செல்லும் நண்பர்களை விலக்குங்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கலகலப்பும் சந்தோஷமும் உண்டு.

**மிதுனம்**
மூத்தவர்களுடன் ஒற்றுமை நன்றாக இருப்பதால் அவர்களின் ஆசி உண்டு. தொழிலில் புதிய வாய்ப்பு கிடைக்கும். உற்சாகமான நாள். காத்திருந்த நல்ல வாய்ப்பு ஒன்று உங்களை தேடிவரும் நாள்.

**கடகம்**
பாராட்டுகள் கிடைக்கும். கவலையில் இருந்து மீளுவீர்கள். பரபரப்பாக செயல்பட்டு மன நிறைவடைவீர்கள். மாலையில் மகிழ்ச்சி கூடும். உங்களுடைய பொறுமைக்கு பலன் உண்டு.

**சிம்மம்**
நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். உங்களின் மரியாதை உயரும். பாராட்டு கிடைக்கும். உங்களின் பெருந்தன்மை அதிகரிக்கும். முயற்சி ஒன்று நீங்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கும்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடும். நிம்மதி அடைவீர்கள். வெளிநாட்டில் உள்ளவர்கள் முன்னேற்றப் பாதையில் நடைபோடுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். பணப்புழக்கம் உண்டு.

**துலாம்**
நண்பர் ஒருவரின் செய்கை உங்களின் மகிழ்ச்சியை அதிகரிக்கும். சிலருடன் இருந்து வந்த கருத்துவேறுபாடு இன்று மறையும். செலவுகள் செய்வதால் நன்மைகள் சிறிதளவு கிடைக்கும்.

**விருட்சிகம்**
குடும்பம் சம்பந்தமான நிகழ்வில் உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரித்து அது செயல்களில் வெற்றி தரும். கூடுதல் முயற்சியால் நல்ல முன்னேற்றத்தை காண்பீர்கள்.

**தனுசு**
உடன்பிறந்தோருடன் இருந்து வந்த பகை மாறும். உழைப்பை நம்புங்கள். உள்ளன்போடு பழகியவர்கள் கைகுலுக்க முன் வருவார்கள். தாழ்வு மனப்பான்மை தலைதூக்க அனுமதிக்காதீர்கள்.

**மகரம்**
பிறருக்கு கொடுத்த வாக்கை பாடுபட்டு காப்பாற்றுவீர்கள். நல்ல மாற்றம் உண்டாகும். உள்ளத்திலும் குடும்பத்திலும் மகிழ்ச்சி.நலம் விரும்பிகளின் ஆலோசனை உங்களுக்கு கைகொடுக்கும்.

**கும்பம்**
அக்கம் பக்கத்து வீட்டாருடன் நல்லுறவு ஏற்படும். உழைப்பினால் ஏற்றம் உண்டு. விருப்பம் ஒன்று நிறைவேறும். பாராட்டுக் கிடைக்கும். கர்வம் அதிகரிக்காமல் கவனம் தேவை.

**மீனம்**
பணியிடத்தில் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். கோபமும், அதிகாரமும் அதிகமாகாமல் கவனம் தேவை. உங்கள் வார்த்தைகளால் ஒருவருக்கு நன்மை உண்டாகும்.

# வன்னியர் இட ஒதுக்கீடு இரத்துக்கு எதிராக தமிழக அரசு மேல்முறையீடு செய்யும்

## உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி உறுதி

சென்னை, நவ. 05

சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வன்னியர்களுக்கு 10.5% உள் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இரத்து செய்து வழங்கியுள்ள தீர்ப்பிற்கு எதிராகத் தமிழக அரசு மேல்முறையீடு செய்யும் என்று உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அறிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராக, சட்டசபைத் தேர்தலையொட்டி மிகவும் அவரசமாக இந்த சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்று நீதிமன்றம் தெரிவித்து இந்த சட்டத்தை இரத்து செய்தது. இதனை அடுத்து, இத்தகைய சட்டம் இரத்து செய்யப்பட்ட இந்தத் தீர்ப்புக்கு பா.ம.க. தலைவர் ராமதாஸ் உள்ளிட்டோர் ஏமாற்றம் தெரிவித்து, தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.



இதனைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் பொன்முடி, 10.5 சதவீத இட ஒதுக்கீடு தொடர்பாகத் தமிழ்நாடு அரசு மேல் முறையீட்டிற்குச் செல்கிறது என்றும் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பைப் பல்கலைக்கழகங்களில் அமல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், 7.5% இடஒதுக்கீட்டில் பொறியியல் சேர்க்கை பெற்ற அரசுப்பள்ளி மாணவர்களின் கல்வி விடுதி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற அறிவிப்புக்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும் என்றும் ஒத்திவைக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளர் தேர்வு டிசெம்பர் 8 ஆம் திகதி முதல் 5 நாட்கள் நடைபெறும் என்றும் அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

# பிரபல நடிகர் விஜய் சேதுபதி மீது விமான நிலையத்தில் தாக்குதல்!

பெங்களூர், நவ. 05

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதி பெங்களூர் விமான நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் அவருடைய ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பெங்களூர் விமான நிலையத்தில் நடிகர் விஜய் சேதுபதியை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தாக்க முயன்ற காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் விஜய் சேதுபதி தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருகிறார். அவர் நடித்த 4 திரைப்படங்கள் ஒரே மாதத்தில் வெளியாகி தமிழ் சினிமாவை திரும்பிப் பார்க்க வைத்தார்.

இந்த நிலையில் பெங்களூரு விமான நிலையத்தில் நடிகர் விஜய் சேதுபதி பாதுகாவலர்களுடனும் விமான நிலைய பாதுகாப்பு வீரர்களுடனும் சென்று கொண்டிருக்கும்போது மர்ம நபர் ஒருவர் பின்னால் விரட்டி ஓடி வந்து தாக்கிய காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் விஜய் சேதுபதி மீதான தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் பெங்களூரு விமான நிலையத்தில் நடைபெற்றதாக தெரிய வந்துள்ளது. விஜய் சேதுபதியை அந்த நபர் ஏன் தாக்கினார் எதற்காக தாக்கினார் என்ற தகவல் வெளியாகவில்லை. இது குறித்து நடிகர் விஜய் சேதுபதி தரப்பிலும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# 'இல்லம் தேடி' கல்வி திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## வலியுறுத்துகின்றார் விஜயகாந்த்



சென்னை, நவ. 05

தமிழக அரசு செயல்படுத்தி உள்ள 'இல்லம் தேடி' கல்வி திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என தே. மு. தி.க. தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியிருக்கின்றார்.

இது தொடர்பில் தே. மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

"கொரோனா பரவல் காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளாக தமிழகத்தில் பள்ளிகள் மூடப்பட்டிருந்தன. தற்போது தொற்று குறைந்து வரும் நிலையில் 1 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

பள்ளிகள் முழுமையாக செயல்பட தொடங்கியுள்ள நிலையில் இல்லம் தேடி கல்வி திட்டம் தற்போது அவசியமா? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மேலும் இந்த திட்டம் மக்களிடையே பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தை முழுக்க முழுக்க தன்னார்வலர்கள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனால் மாணவர்களுக்கு எந்த மாதிரியான பாதிப்புகள் ஏற்படும் என்பது யாருக்கும் தெரியாது. எனவே இல்லம் தேடி கல்வி திட்டம் அவசியமா? என்பதை தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணாமல் தமிழ்நாடு நாள் கொண்டாடப்படும் திகதியை மாற்றுவதால் யாருக்கும் எந்த பயனும் இல்லை. எனவே மக்கள் பிரச்சனைகளுக்கு தமிழக அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இவ்வாறு விஜயகாந்த் கூறியுள்ளார்.

# கூட்டமைப்பை போன்றே அரசுக்குள்ளும் பிரச்னை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

கிளிநொச்சி, நவ.05

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் இருக்கும் பிரச்னை போன்றுதான் அரசாங்கத்திலும் கருத்து வேறுபாடுகள் உள்ளன எனவும், ஆட்சி இப்போதைக்கு கவிழ்க்கப்படாது தொடர்ந்து பயணிக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று எமது அரசாங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலிலும் முன்னெடுக்கப்படும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் இனவாத மற்று, பிரதேசவாதமற்று நடைபெறுகின்றன.

அந்த வகையில் இந்த வருடம் கிட்டத்தட்ட 100க்கு மேற்பட்ட குளங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அதனை புனரமைத்து மக்களின் சிறந்த பயன்பாட்டுக்கு விடுவதற்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல் நடத்துவது நிச்சயமில்லை. தற்போதுள்ள நாட்டுச் சூழல் இந்த கொரோனா நிலைமைகள் அதற்கான சாத்தயமான நிலை இருப்பதாக தெரியவில்லை. கடந்த முண்டாட்சி காலத்தில் அவர்கள் இந்தத் தேர்தலை வைத்திருக்கலாம். அவர்கள் இருப்பதை குழப்பிவிட்ட நிலைமை உள்ளது. அவர்களின் வழக்கமான நிலையே அதுதான். முண்டாட்சி புரிந்தவர்கள் மக்களின் இந்த பிரச்னைகளை தீரா பிரச்னைகளாக வைத் திருப்பதுதான் அவர்களின் நோக்கமாக வரலாறு வெளிப்படுத்தி வருகின்றது-என்றார்.

வரவிருக்கும் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கம் தோற்கடிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. அமைச்சர் என்ற வகையில் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் என ஊடகவியலாளர் அமைச்சரிடம் வினவினார். அதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

வழமையான பொய்யாகும். வழமையான பொய்களில் இதுவுமொரு பொய். முன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது. ஆனால் இதற்கு சாதாரண பெரும்பான்மை போதுமாகும். இந்த அரசாங்கம் உடனடியாக கவிழ்ந்து போகும் நிலையில் இல்லை. அது தொடர்ந்தும் போகும். இந்த அரசாங்கத்தினை தலைமை தாங்குபவர்கள் சர்வதேச சமூகங்களாலேயே தீர்க்க முடியாமல் நீண்டகாலமாக இருந்த வன்முறையை முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்கள்-என்றார்.

ஆளும்தரப்பில் உள்ள குழப்ப நிலைகள் தீர்க்கப்படுமா என ஊடகவியலாளர் அமைச்சரிடம் வினவினார்.

அது எங்கேயும் இருக்கும். வீட்டுக்கு வீடு வாசல்படி மாற்றுக்கருத்துக்கள் எல்லாம் இருக்கும். இப்பொழுது ஆட்சி யில் இல்லாத கட்சிகளுக்குள்ளேயே பிரச்னைகள் இருக்கின்றன.

உதாரணத்துக்கு நீங்கள் இருக்கின்ற பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒன்று இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே பிரச்னைகள் இருக்கின்றன. அதைவிட அந்த கட்சிகளுக்குள்ளுயே பிரச்னைகள் இருக்கின்றன. இது பொதுவான நிலையாகும்-என்றார் அமைச்சர். (அ)

# 1 கிலோ நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய அரசு திட்டம்

கொழும்பு, நவ. 05

விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நெல்லை 100 ரூபாய்கு நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாட்டு நெல் கிலோ 80 ரூபாவுக்கும், சம்பா நெல் கிலோ 100 ரூபாவுக்கும், கீரிச் சம்பா நெல் கிலோ 125 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய வியாபாரிகள் ஆசைப் படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்களில் நாடளாவிய ரீதியில் விவசாயிகள் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் அந்த போராட்டங்கள் உண்மையான விவசாயிகளைப் பற்றியது அல்ல என்று நான் நம்புகிறேன்.

விவசாய அமைச்சரின் பொம்மைகள் செய்து எரிக்கப் படுகின்றன. விவசாய அமைச்சர் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. ஆனால் வரலாற்றில் முதல் முறையாக விவசாய அமைச்சராக இருந்த காலத்தில் ஒரு கிலோ நெல்லுக்கு ரூபா 80 கிடைக்கிறது என்பதை விவசாயிகள் மறந்து விடுகிறார்கள். அதையே விவசாயிகளிடமும் கேட்கிறேன். பயப்படவேண்டாம். அரசாங்கம் உங்களுக்கு உரம் தருகிறது. உங்கள் பொருட்களை வாங்க அரசு தயாராக உள்ளது.

மேலும் இயற்கை விவசாயத்தால் விவசாயத்திற்கு நஷ்டம் ஏற்பட்டால் அதற்கான நஷ்டத்தை அரசே செலுத்தும். அந்த அரசாங்கத்தின் உத்தரவாதத்தை நம்பி உங்கள் விவசாயத்தில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றார்.

# மன்னாரில் களையிழந்த தீபாவளி கொண்டாட்டம்

மன்னார், நவ. 05

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் கொரோனா தொற்று பரவல் காரணமாகவும் நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்தில் தீபாவளி கொண்டாட்டங்களில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.

குறிப்பாக பொருட்கள் மற்றும் ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளமையால் மக்கள் பொருட்களின் கொள்வனவு மற்றும் ஆடை கொள்வனவில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.

மேலும் தொடர்ச்சியாக மன்னாரில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றமையினால் இம்முறை தீப ஒளி திருநாள் கொண்டாட்டங்கள் களையிழந்தன. அதேவேளை, கொரோனா தொற்று பரவல் காரணமாக ஆலயங் களில் சிறிய அளவிலான விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன் மக்கள் குறைந்த அளவிலேயே ஆலயங்களுக்குச் சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (அ)

### சீனி, பருப்பு உள்ளிட்ட

# 17 அத்தியாவசிய பொருள்கள் மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்கியது அரசு

கொழும்பு, நவ. 05

சீனி உள்ளிட்ட 17 அத்தியாவசியப் பொருள்கள் மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்கி அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சந்தையில் சீனியின் விலை கடுமையாக உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த அரசு செப்ரெம்பர் 2ஆம் திகதி கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்தது.

ஒரு கிலோ வெள்ளை சீனியின் மொத்த விலை 116 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை 122 ரூபாவாகவும், ஒரு கிலோ சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 125 ரூபாவாகவும், பொதி செய்யப்பட்ட சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 128 ரூபாவாகவும் இருந்தது.

சீனி இறக்குமதியாளர்களுக்கும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இறக்குமதியாளர்கள் சீனியை அதிகபட்சமாக 150 ரூபாவுக்கு விற்பனை செய்ய ஒப்புக்கொண்டுள்ளனர்.

அத்துடன், பருப்பு, பெரிய வெங்காயம், ரின் மீன், சோளம், கோழி இறைச்சி, நெத்தலி, கருவாடு, பயறு, உருளைக் கிழங்கு, கடலை, கோதுமை மா மற்றும் பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் மீதான கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்த அரசிதழ்களை இரத்துச் செய்தும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (அ)

### விலைச் சூத்திரத்தின் அடிப்படையில்

# பட்ஜெட்டின் பின்னர் சிகரெட் விலை உயரும்

கொழும்பு,நவ.5

தேசிய புகையிலை மற்றும் மது ஒழிப்பு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளுக்கான விலை சூத்திரத்தின் பிரகாரம் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் சிகரெட்டின் விலை அதிகரிக்கப்படும் என அதன் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் முதல் தடவையாக சிகரெட் கொள்வனவு செய்வதை தடுக்கும் வகையில் விலைச்சூத்திரமொன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் அது சுகாதார அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு முன்வைக்கப்படும்.

இதன்படி, இந்த வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் சிகரெட் ஒன்றின் விலை 4 முதல் 5 ரூபாயால் அதிகரிக்கப்பட வுள்ளது. அடுத்த 5 வருடங்களில் சிகரட் ஒன்றின் விலை 20 ரூபாய்க்கு அதிகமாக அதிகரிக்கும்.

இலங்கையில் புகைப்பிடிப்பதால் நாளொன்றுக்கு 60 பேரும் வருடத்துக்கு 22 ஆயிரம் பேரும் உயிரிழக்கின்றனர். மக்களின் பாதுகாப்பிற்காக இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வறுமைக்கு புகைபிடித்தல் முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்று நான் நம்புகிறேன். விலைச்சூத்திரத்தால் இலங்கை அரசுக்கு வரியாக அதிக சதவீதம் சேர்க்கப்படுகிறது-என்றார். (அ)

# சீன கரிம உரத்தை மீண்டும் பரிசோதிப்பதற்கு தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை முடிவு

கொழும்பு, நவ. 05

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை சீனாவிலிருந்து உர மாதிரிகளை மீண்டும் பரிசோதிக்கத் தொடங்கியுள்ளது, இருப்பினும் தொடர்புடைய மாதிரிகள் ஒரு சுயாதீன மூன்றாம் தரப்பினரால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் தரம் உறுதி செய்யப்பட்டதாகும்.

அதன்படி, உரிய மாதிரிகள் பொருத்தமற்றவை என கண்டறியப்பட்டால், உரிய உர ஏற்றுமதியை இறக்குமதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ சட்டரீதியாக சாத்தியமில்லை என தாவர தனிமைப்படுத்தல் சேவையின் மேலதிக பணிப்பாளர் மருத்துவர் துஷார விக்கிரமாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தாவர தனிமைப்படுத்தல் சேவையின்படி, கடந்த 3 மாதங்களில் 145 கரிம உர மாதிரிகளுக்கு இறக்குமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

16 நாடுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை 19 கரிம உர மாதிரிகள் நாட்டில் பெறப்பட்டுள்ளதாகவும் தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை தெரிவித்துள்ளது.

ஏழு கரிம உர மாதிரிகளில் நுண்ணுயிரிகள் காணப்பட்டதாக மருத்துவர் துஷார விக்கிரமாராய்ச்சி தெரிவித்தார்.

இதேவேளை, சீனாவின் கிங்டாவ் துறைமுகத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி 20,000 மெற்றிக் தொன் கரிம உரங்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கி புறப்பட்ட ஹிப்போ ஸ்பிரிட் கப்பல் இதுவரை நாட்டுக்கு வந்துள்ளதாக உரிய அதிகாரிகளால் தமக்கு அறிவிக்கப்படவில்லை என தாவர தனிமைப்படுத்தல் சேவையின் மேலதிக பணிப்பாளர் மருத்துவர் துஷார விக்கிரமாராய்ச்சி கூறினார்.

எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடல் போக்குவரத்து இணையத்தளங்கள் கப்பல் இலங்கைக் கடலுக்குள் நுழைந்ததை உறுதிப்படுத்தியதுடன், நவம்பர் 2 ஆம் திகதி, கப்பல் 61 கடல் மைல்களுக்கு அப்பால் வெலிகம கடற்கரையில் இருப்பதாக மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் இந்த கப்பல் எங்கே சுற்றிக்கொண்டிருக்கின்றது என்பது மர்மமாகவே உள்ளது. (அ)

# 2022 பட்ஜெட்டில் மக்களுக்கு நன்மைகள் ஏதுமே கிட்டாது!

## பகிரங்கமாக சொல்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவ. 05

**சமர்ப்பிக்கப்படவுள்ள 2022 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நன்மைகளும் வழங்கப்படமாட்டாது என அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.**

**நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒவ்வொரு வருடமும் மக்களுக்கு நன்மைகள் உண்டு. ஆனால் 2022 இல் இது சாத்தியமில்லை. வழமையான செலவுகள் தொடரும்.

மேலும் எங்களால் கூடுதலானவற்றை ஒதுக்க முடியும். ஆனால் மக்க ளுக்கு நன்மைகள் மற்றும் மானியங்களைப் பொறுத்த வரை அது சாத்தியமில்லை.

முன்பு புதிய வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது, ஒரு நபரின் சம்பளத்தை அதிகரிப்பதுபோல், மக்கள் எப்போதும் பரிசை எதிர்பார்ப்பார்கள். ஆனால் அதை இப்போதும் வழங்கமுடியாது-என்றார். (அ)



# இந்தியாவிலிருந்து திரவ உரம் வந்தது

கொழும்பு, நவ. 05

இலங்கைக்கு நேற்றுக் காலை இரண்டு கட்டமாக இந்தியாவில் இருந்து நனோ நைதரசன் யூரியா திரவ உரம் எடுத்து வரப்பட்டது. இந்தியாவின் விமானப்படை சரக்கு விமானங்களில் இது கொண்டு வரப்பட்டது. அதிகாலை ஒரு விமானத்திலும் முற்பகல் மற்றொரு விமானத்திலுமாக 100 தொன் நனோ நைதரசன் யூரியா திரவ உரம் கொண்டு வரப்பட்டது. (அ)

# வெலிகம ஹோட்டல் ஒன்றில் நேற்று வெடிப்புச் சம்பவம்!

கொழும்பு, நவ. 05


வெலிகம - கப்பரதொட்ட- ஆரியவத்த பகுதியிலுள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவம் நேற்று காலை 8:30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெடிப்பு சம்பவத்தில் ஹோட்டலின் உரிமையாளர், அவரது மகன் மற்றும் அயலவர் என மூவர் காயமடைந்துள்ளனர்.

வெடிப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எனினும், எரிவாயு சிலிண்டர் வெடித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)







# 16 வயதுச் சிறுவன் செலுத்திய கார் நான்கு வாகனங்களை மோதியது!

## ஒருவர் உயிரிழப்பு; நான்கு பேர் காயம்

கொழும்பு, நவ. 05

வெலிசறையில் 16 வயதுச் சிறுவன் செலுத்திச் சென்ற சொகுசு கார் ஒன்று பல வாகனங்களுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை வெலிசர மயானத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு கார் ஒன்று வீதியை விட்டு விலகி எதிர்த்திசையில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ மற்றும் கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக மஹாபாகே பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் நால்வர் படுகாயமடைந்த நிலையில் ராகம போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தின் சாரதியும், அவரை அனுமதித்த தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹாபாகே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரசுக்கு எதிராக உயர்நீதிமன்றில் சாட்சியம் அளிக்க வீரவன்ஸ தயார்!

## ரஞ்சன் ஜயலால் கூறுகிறார்

கொழும்பு, நவ. 05

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் நிலையத்தின் 40 சதவீத பங்கினை அமெரிக்க நியூ போர்டேர்ஸ் எனர்ஜி நிறுவனத்துக்கு 250 மில்லியன் டொலருக்கு விற்க ஒப்புக்கொண்டமை மற்றும் இலங்கைக்கான எல்.என்.ஜி வினியோகத்தில் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் ஏகபோக உரிமைக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தயார் என இலங்கை மின்சார சபையின் கூட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்பின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கைக்கு எதிராக தமது தொழிற்சங்கம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை சாட்சிகளாக அழைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மக்கள் பேரவையில் எல்.என்.ஜி ஏகபோக உரிமையை அமெரிக்காவுக்கு மாற்றியமைக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

இதேவேளை, அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு கையளிக்க அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானத்தை வலுவிழக்க செய்யுமாறு கோரி முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தாக்கல் செய்த, மனு நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, குமுதினி விக்ரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்த்தன ஆகியோர் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டது.

இதற்கமைய, குறித்த வழக்கை எதிர்வரும் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதியரசர்கள் தீர்மானித்துள்ளனர். (அ)

# போலி இரசாயன அறிக்கைகளை தயாரித்து ரூ.1 பில்லியன் மோசடி!

## சி.ஐ.டி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 05

நெல் விவசாயிகளுக்கு அரசு மூலம் வழங்கப்படும் யூரியா, ரி.எஸ்.டி மற்றும் எம்.ஓ.வி போன்ற உர வகைகளில் போலி இரசாயன அறிக்கைகளை தயாரித்து 1 பில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்த நிதிக் குற்றப் பிரிவு நேற்று முன் தினம் கொழும்பு பிரதான நீதவானிடம் அறிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே பல அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மகாவலி, விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

உர செயலகத்தின் பணிப்பாளர் அமித் ரோஷன் மற்றும் விவசாய அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் எல்.கயான் ஹெக்டர் ஆகியோரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்.

இதுகுறித்த சமர்ப்பிப்புகளை ஆராய்ந்த நீதிமன்றம், விசாரணையை விரைவுபடுத்தி மேலும் சமர்பிக்குமாறு சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டுள்ளது. (அ)

ஈழநாடு



# கடும் நிதி நெருக்கடியில் இலங்கை மின்சார சபை

## அதன் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 05

**இலங்கை மின்சார சபை தற்போது நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.சி.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பெர்னாண்டோ, இலாபகரமான மின் உற்பத்தி முறைகளைப் பயன்படுத்தாவிட்டால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க நேரிடும்.

மின்சார உற்பத்தி தொடர்பாக 2006 ஆம் ஆண்டு இதே போன்ற நெருக்கடியை எதிர்கொண்டோம்.

2014 ஆம் ஆண்டளவில் அது தீர்க்கப்பட்டு, மின்சாரத்தை உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு சலுகை விலையில் மின்சாரத்தை வழங்குவதற்கு முடிந்தது.

தேவை அதிகரித்தாலும், விநியோகமும் 55 சதவீதத்தில் இருந்து 99 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. அதனால் தான் நெருக்கடி தீர்க்கப்பட்டது.

எவ்வாறாயினும், மின்சார சபை தற்போது கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

ஒரு யுனிட் மின்சாரம் 16.65 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. அதன் உற்பத்தி விலை 23.24 ரூபா வரை உள்ளது.

அடுத்த ஆண்டுக்குள் செலவு 25 ரூபாவாக அதிகரிக்கும். ஏனெனில் ஒரு மெற்றிக் தொன்னுக்கு 55 அமெரிக்க டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தற்போது 180 அமெரிக்க டொலருக்கு மேல் உள்ளது - என்றார். (அ)

# இரண்டு வாரங்களில் காத்திருக்கும் ஆபத்து

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 05

எதிர்வரும் இரண்டு வாரங்களில் இலங்கையில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெருமளவில் மக்கள் ஒன்று கூடுவதனால் இரண்டு வாரங்களின் பின்னர் இந்த நிலைமை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டாலும் மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த கால அனுபவங்களின்படி மக்கள் ஒன்று கூடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இரண்டு வாரங்களின் பின்னர் புதிய அலை உருவாகியுள்ளது.

மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். சுற்றுலா பயணங்கள் செல்வதனால் ஆபத்தான நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

தயவு செய்து மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் ஓர் அலை உருவாகினால் ஆபத்துக்கள் அதிகமாக இருக்கும் - என்றார். (அ)

# வடக்கு ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து போராட்டக்காரர்களின் பந்தல் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 05

சுமார் 8 மாதங்களுக்கு மேலாக நிரந்தர நியமனம் கேட்டுப் போராடி வந்த சுகாதாரத் தொண்டர்களின் போராட்டப் பந்தல் வடக்கு மாகாண ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து நேற்று முன்தினம்தினம் மாலை அகற்றப்பட்டது.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் தகரப் பந்தல் அமைத்து இரவு பகலாக போராடி வந்தனர்.

இந்நிலையில் தமது நிலைமையை அறிந்து எம்முடன் கலந்துரையாடி எமது பிரச்னைகளை தீர்ப்பதாக ஆளுநர் உறுதி அளித்ததன் காரணமாக அவரது வார்த்தைகளுக்கு மதிப்பளித்து குறித்த தகரப்பந்தல் அகற்றப்பட்டதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (அ)



# ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் இருவர் கைது!

மன்னார், நவ. 05

தலைமன்னாரில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணி அளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை அரச போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பஸ்ஸில் சுமார் 250 கிராம் நிறை கொண்ட ஐஸ் ரக போதைப் பொருளை தம் வசம் மறைத்து வைத்திருந்து கடத்திச் செல்ல முற்பட்ட புத்தளம் மற்றும் சிலாவத்துறை பகுதிகளைச் சேர்ந்த 2 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் மன்னார் நகரின் பிரதான வீதிப் பகுதியில் வைத்து குற்றத்தடுப்புப் பொலிஸார் குறித்த பஸ்ஸில் சோதனைகளை மேற்கொண்ட போது குறித்த இரு சந்தேக நபர்களும் ஐஸ் ரக போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர். (அ)

# விடுதலையான அரசியல்கைதிக்கு வீடு; அடிக்கல் நாட்டினார் இராணுவத் தளபதி



யாழ்ப்பாணம், நவ. 05

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவருக்கு புதிய வீடு ஒன்றுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் வந்த இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவினால் இந்த வீட்டுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இந்தக் கைதி அண்மையிலேயே ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இவரது பெற்றோர் உயிரிழந்துள்ளதுடன் இவர் தற்போது சகோதரியுடன் வசித்து வருகின்றார். இராணுவத்தினரிடம் இவர் உதவி கோரியநிலையில் வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அதேவேளை, குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பம் ஒன்றுக்காக உடுவில் பகுதியில் இராணுவத்தினரால் கட்டப்பட்ட புதிய இல்லம் ஒன்றும் பயனாளிகளிடம் இராணுவத் தளபதியால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கு உட்பட இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# கேரள கஞ்சாவுடன் இளைஞர் அதிரடிப்படையினரால் கைது

வவுனியா, நவ. 05

வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியில் கேரளா கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை செட்டிகுளம் விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான நபர் ஒருவர் நிற்பதாக விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட விசேட அதிரடிப் படையினர் இளைஞர் ஒருவரின் பயணப் பொதியை சோதனையிட்டனர்.

இதன்போது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1கிலோ 506 மில்லிகிராம் எடையுடைய கேரளக் கஞ்சாவை அவர்கள் கைப்பற்றினர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வவுனியா தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# இலங்கைக்கு 500 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கியது உலக வங்கி

கொழும்பு, நவ. 05

உலக வங்கி இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

விவசாயம் மற்றும் கால நிலை மாற்ற சவாலை எதிர்கொள்ளல் உள்ளிட்ட செயல் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக தெரியவருகிறது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் இதன்மூலம் 16 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது தெற்காசியாவுக்கான உலக வங்கியின் துணைத்தலைவர் ஹார்ட்விக் ஷாக்பர் இது பற்றி தெரிவிக்கையில்-

கிராமப்புற பகுதிகளில் வாழும் மக்களை சுகாதாரம், கல்வி சேவைகள் மற்றும் பொருளாதார வாய்ப்புக்களுடன் இணைக்க வேண்டுமாயின் இலங்கையில் தடையற்ற மற்றும் பாதுகாப்பான சாலை வலையமைப்பு அவசியமாகும்.

அளவிடப்பட்ட வீதி முதலீடுகள் இலங்கையின் மனித மூலதனத்தை துரிதப்படுத்தும், அது நிலையான மற்றும் சிறந்த பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்-என்றார். (அ)

# கூட்டமைப்புடன் 9ஆம் திகதி இந்தியத் தூதுவர் சந்திப்பு!

கொழும்பு, நவ. 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு, எதிர்வரும் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அண்மையில் இந்தியத் தூதர் கோபால் பாக்லேயுடனான சந்திப்பின்போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பை அதன் தலைவர் இரா.சம்பந்தன் கோரியிருந்தார்.

இதனடிப்படையில் 9ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்திய தூதரை முன்னர் சந்தித்த போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருமாறு கூட் டமைப்பினர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாற்று வழியில் சிந்திக்க வேண்டும் தமிழர் தரப்பு

**சிக்மலிங்கம் றெஜினோல்ட்**

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்தன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ் அரசியல்வாதிகளையும் ஊடக ஆய்வாளர்களிற் சிலரையும் சந்தித்திருந்தார். இதன்போது பெரும்பாலான அரசியல்வாதிகள் இலங்கை - இந்திய உடன்படிக்கையில் எட்டப்பட்ட 13 ஆவது திருத்தத்தைப் பற்றிப் பேசினர்.

கஜேந்திரகுமார் போன்றவர்களோ இதற்கப்பால் சென்றே அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றனர். ஏனையோர் தமது தனிப்பட்ட விவகாரங்கள் உட்பட இலங்கை அரசாங்கத்தைப் பற்றிய முறைப்பாடுகளைச் செய்வது வரையிலேயே அதிகமாக அக்கறை காட்டினர்.

இதொன்றும் நமக்குப் புதியதில்லை. இந்தச் செய்தியும் உங்களுக்குப் புதியதல்ல. இப்பொழுது நாம் அறிய வேண்டியது, இதற்கப்பாலான சில சங்கதிகளையே.


முதலில் சில அடிப்படையான விசயங்களைப் பற்றிப் பார்ப்போம்.

1. இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வு விசயத்தில் இந்தியத் தலையீடு ஏற்படத் தொடங்கி 40 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஆயுதப் போராட்டத்துக்கு வழங்கிய ஆதரவில் தொடங்கியது இது. இயக்கங்களுக்கு இந்திய அரசாங்கமே 1980களின் ஆரம்பத்தில் பயிற்சி வழங்கியது. ஆனாலும் அந்த வழியில் தீர்வு எட்டப்படவில்லை. ஆகவே இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

2. ஆனாலும் தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தனாய், 1987இல் இலங்கையுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்தது இந்தியா. அதில் தமிழர்களுடைய விவகாரமும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் பிறந்த குழந்தையே 13 ஆவது திருத்தமும் மாகாண சபை முறைமையும். இது நிகழ்ந்தும் 34 ஆண்டுகள் கடந்து விட்டது. மாகாணசபை இன்னும் தேறாத குழந்தையாகவே உள்ளது. 34 ஆண்டுகளாக 13ஆவது திருத்தத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம். இன்னும் எவ்வளவு காலம் இதைப்பற்றி இப்படி இந்தியாவும் தமிழர்களும் பேசப் போகிறார்களோ!

3. புலிகள் எல்லாவற்றுக்கும் இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. புலிகள் இல்லாமற் போய் 13 ஆண்டுகளாகிறது. 13இல் ஒரு படி முன்னேற்றம் கூட எட்டப்படவில்லை.

4. முன்னர் அரசியற் தீர்வை வலியுறுத்தி ஆயுதப் போராட்டம் நடந்தது. பிறகு புலிகள் தலைமையில் இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பெரும் போரே நடந்து கொண்டிருந்தது. இதனால் தவிர்க்க முடியாமல் இலங்கை அரசாங்கம் தமிழர்களுடன் பேசும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகியது.



1985 இலிருந்து 1987க்குள் பத்துத் தடவைக்கு மேலே பேச்சுகளில் இலங்கை ஈடுபட்டது. இதில் பிரதான பாத்திரம் வகித்தது இந்தியா. 1990 இலிருந்து 2009 வரையில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த அத்தனை இலங்கைத் தலைவர்களும் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். அப்படி ஈடுபட வேண்டிய நிலைமை - நிர்ப்பந்தம் - இலங்கை அரசுக்கு ஏற்பட்டது. 2009 இற்குப் பிறகு இந்த நிலை இல்லை.



5. 2009க்குப் பின்னர் அநேகமாக மேற்குலகும் இந்தியாவும் இலங்கைத் தமிழர் விடயத்தில் கரிசனை கொண்டிருப்பதைப் போன்ற ஒரு தோற்றம் உண்டு. இந்தப் பதின்மூன்று ஆண்டுகளிலும் பல தடவை மேற்குலகத் தலைவர்களோடும் அவற்றின் பிரதிநிதிகளோடும் தமிழ்த்தலைவர்களும் ஊடக ஆய்வாளர்களும் சந்திப்புகளைச் செய்திருக்கிறார்கள். விவகாரங்களைப் பேசியிருக்கிறார்கள். முறையிட்டிருக்கிறார்கள். அழுது புலம்பியிருக்கிறார்கள்.

அந்த வகையிலான ஒரு சந்திப்புத்தான் அண்மையில் ஹர்ஷ் வர்தனுடன் நடந்ததும். ஒவ்வொரு தடவையும் பெரிய நம்பிக்கைகளோடு சென்று எல்லாவற்றையும் சொல்லி முறையிட்டு விட்டு வாயைப் பிளந்து கொண்டிருப்பதே கதையாகி விட்டது. இந்த அவல நிலை எப்போதுதான் முடியுமோ?

6. இந்த நிலை மாறி உருப்படியாக எதையாவது செய்யக் கூடிய தலைமைகள் தமிழ் மக்களுக்கு உண்டா? இல்லையென்றால், இனியாவது அவ்வாறான ஒரு யதார்த்தத் தலைமையை தமிழர்களும் மேற்குலகும் இந்தியாவும் கண்டு பிடிக்குமா? மாற்று உபாயங்களை நோக்கிச் சிந்திக்கப்படுமா? மாற்று உபாயங்கள் வகுக்கப்படுமா?

7. தமிழர்களின் காதுகளில் தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் அரசியல் ஆய்வாளர்களும் பூவைச் சுற்றுவதை நிறுத்த மாட்டார்களா? கொஞ்சமாவது சொந்தப் புத்தியோடு இயங்குவதைப் பற்றிச் சிந்திப்பார்களா?

8. வெளியார் வருகையைப் பற்றியும் அதனால் உண்டாகும் விளைவுகளைப் பற்றியும் 1970களின் முற்பகுதியிலேயே கவிஞர் சண்முகம் சிவலிங்கம் உள்படப் பலரும் தீர்க்கதரிசனமாக தமிழ்ச் சமூகத்துக்கு எடுத்துச் சொன்ன பிறகும் இப்படி அண்ணாந்து அடுத்த வேலியைப் பார்த்துக்கொண்டு அலைவது ஏன்? இது எப்போது முடியும்? இதைப்பற்றியெல்லாம் மக்கள் எப்போதுதான் புரிந்து கொள்ளப் போகிறார்கள்? அல்லது வரலாறு முழுவதும் மூடர்களாகத்தான் இருக்கப் போகிறார்களா?

9. தமிழ் மக்களின் அரசியல் அவல நிலையைப் பற்றி கவிஞர் மு.பொன்னம்பலம் “ஆக்காண்டி” என்ற கவிதையில் தெளிவாகவே சொல்லியிருக்கிறாரே. இதற்குப் பிறகும் ஏன் தடுமாற்றங்கள்? என்று தமிழ்த் தலைவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எடுத்துச் சொல்வது யார்?

10. ஒன்றைத் திரும்பத்திரும்பத் எவ்வளவு காலத்துக்குத்தான் செய்து கொண்டிருக்க முடியும். அதில் எந்த வகையான முன்னேற்றமும் ஏற்படாமலே? அப்படியென்றால் தமிழர்களின் அடுத்த கட்ட வழிமுறை என்ன?

இப்படிப் பல விடயங்கள் உள்ளன நம்மை நாமே கேட்டுக் கொள்வதற்கு?

இது போருக்குப் பிந்திய காலம் (Post war period). இதனைக் கடப்பது - எதிர்கொள்வது என்பதும் கையாள்வது என்பதும் மிகச் சவாலானது. மிகக் கவனமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டியது. இதைத் தமிழர்களும் சரி, வெளிச்சக்திகளும் சரி சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட்டனவா? குறைந்த பட்சம் போரினால் பாதிக்கப்பட்டோருக்கு முறையான இழப்பீடுகள் - நிவாரணம் அளிக்கப்பட்டதா? அதைப்பற்றி இவர்கள் அக்கறைப்பட்டனரா?

இதெல்லாம் மிக எளிய அடிப்படையான விசயங்கள். இந்தப் பருப்பைக் கூட வேக வைக்கத் தெரியாத சமையற்காரர்களை நம்பித்தான் பெரு விருந்தொன்று கிடைக்கும் என்று எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறோம்!

நமக்குத் தெளிவாகவே பல விடயங்கள் புரிகின்றன. அவியக்கூடிய பருப்புகள் எவை? அவற்றை எப்படி அவித்துக் கொள்ள வேண்டும் என. அதைப்பற்றிச் சிந்திப்பதே நல்லது. பொருத்தமானது.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம், தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது. ■

> **“ இது போருக்குப் பிந்திய காலம். இதனைக் கடப்பது - எதிர்கொள்வது என்பதும் கையாள்வது என்பதும் மிகச் சவாலானது. மிகக் கவனமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டியது. இதைத் தமிழர்களும் சரி, வெளிச்சக்திகளும் சரி சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட்டனவா? குறைந்த பட்சம் போரினால் பாதிக்கப்பட்டோருக்கு முறையான இழப்பீடுகள் - நிவாரணம் அளிக்கப்பட்டதா? அதைப்பற்றி இவர்கள் அக்கறைப்பட்டனரா?**




# உண்மைக்கான விலை:
# அல்ஜஸீரா கடந்து வந்த ஆபத்தான 25 வருடங்கள்

நவம்பர் முதலாம் திகதி தனது ஊடகப் பணியின் 25ஆவது ஆண்டை அல்ஜசீரா நிறைவுசெய்துள்ளது. இந்த பின்புலத்தில், அதன் கடந்த கால வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கும் போது, உலகின் பயங்கரமான போர்கள் நடைபெறும் சூழல்களில், பல ஆபத்துக்கள், பல தடைகள், பல தாக்குதல்கள் என்பவற்றுக்கு அந்த ஊடகம் முகங் கொடுத்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

அல்ஜசீரா சந்தித்த ஆபத்துகள் என்று பார்க்கும் போது, அந்த ஊடகம் தமது பணிமனைகளை மூடும்படி அச்சுறுத்தும் தாக்குதல்களைச் சந்தித்ததோடு, அதன் முன்னணி ஊடகவியலாளர்கள் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்களது அலை பேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டிருக்கின்றன.

அவர்களது இணையத்தள வலைப் பின்னல்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்றி, அரசுகளின் ஆதரவுடன் அவர்களது செய்மதிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் சில இடங்களில் அவர்களது பணிமனைகள் மீது விமானத் தாக்குதல்களும் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

**அரபு உலகின் முதலாவது சுயாதீன செய்திச்சேவை**

அரபு உலகு முழுவதுக்குமான ஒரு முழுநேர செய்திச்சேவையை வழங்கி, நேரலை விவாதங்களை மேற்கொள்ளும் அரபு மொழிச் செய்மதிச் செய்திச்சேவையாக தனது முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை 1996 இல் கட்டார் நாட்டின் டோஹா நகரிலிருந்து அல்ஜசீரா தொடங்கியது.

அக்காலத்திலிருந்து பல மொழிகளில் பல்வேறு சேவைகளை உள்ளடக்கிய ஒரு பெரும் ஊடக வலைப்பின்னலாக அல்ஜசீரா இன்று வளர்ச்சியடைந்திருக் கிறது. பொதுமக்களின் நன்மைக்காக தாபிக்கப்பட்ட நிறுவனமான அல்ஜசீரா, தற்போது தொலைக்காட்சிச் சேவைகள், இணையத்தளங்கள், ஏனைய எண்ணிமத் தளங்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

உலகின் சில முக்கிய நிகழ்வுகளை தனது பன்னாட்டுச் செய்திச் சேவையூடாக அல்ஜசீரா வெளிக்கொணர்ந்திருக்கிறது. 2003ஆம் ஆண்டில் ஈராக்கில், அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கை, 2011இல் அரபுலகில் நிகழ்ந்த வசந்தகாலப் போராட்டங்கள் என்பவை இவற்றுள் அடங்குகின்றன. அது மட்டுமன்றி, தற்போது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல், ஆப்கானிஸ்தான் நாட்டில் நடைபெற்ற போர் என்பவை தொடர்பான செய்திகளையும் அது வழங்கி வந்திருக்கிறது.

இந்த முயற்சிகள் அனைத்தின் நடுவிலும் அல்ஜசீராவின் செய்திச்சேவையை முடக்குவதற்கும் உலகின் பல அரசுகள் முயற்சித்திருக்கின்றன. 2005 இல் அன்றைய அமெரிக்க அதிபரான ஜோர்ஜ் புஷ் அன்றைய பிரித்தானிய பிரதமரான ரோனி பிளேயரைச் சந்தித்த போது, டோஹாவில் உள்ள அல்ஜசீராவின் தலைமைப் பணிமனையை விமானத் தாக்குதல்கள் மூலம் தகர்க்க யோசித்ததாகச் குற்றஞ்சாட்டப்படுகிறது.

“ஆனால் பெருமளவில் அரபுலகில் உள்ள அடக்குமுறை அரசுகளே, அல்ஜசீராவின் குரலை நசுக்கக் கடந்த காலங்களில் முயற்சி செய்திருக்கின்றன” என்று மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பின் திட்ட இயக்குநரான ஷெரிவ் மன்சூர் தெரிவித்தார்.

**திடீர்ச் சோதனைகளுக்கு அல்ஜசீராப் பணிமனைகள்**

கடந்த 25 வருடங்களை நினைவுகூரும் அல்ஜசீரா ஊடக வலைப்பின்னல் மீது பிரயோகிக்கப்பட்ட பல்வேறு அழுத்தங்களுக்கு, உலகம் முழுவதும் இயங்குகின்ற அல்ஜசீராப் பணிமனைகள் முகங்கொடுத்திருக்கின்றன - அதன் இணையத்தளங்கள் முடக்கப்பட்டிருக்கின்றன, திடீர்ச் சோதனைகளுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றன, துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்றி பல்வேறு நாடுகளில் அவை விமானத் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப் பட்டிருக்கின்றன.

மிகவும் அண்மையில் தியூனிசியா (Tunisia) நாட்டில், அதன் தலைநகரான தியூனிஸ் (Tunis) இல் அமைந்திருக்கின்ற பணிமனைக்குள் நுழைந்த சிவில் உடைதரித்த 20 காவல்துறையினர் அனைத்துப் பணியாளர்களையும் அங்கிருந்து வெளியேறுமாறு கட்டளையிட்டார்கள். கடந்த ஜூலை மாதம், அரசை ஆட்சியிலிருந்து அகற்ற அதிபர் காயிஸ் சைத் முற்பட்ட பின்புலத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. பாதுகாப்புப் படையினர் பணியாளர்களின் அலைபேசிகளின் செயற்பாடுகளை நிறுத்துமாறு கட்டளையிட்டதோடு, தமது உடைமைகளை எடுத்துச்செல்வதற்கான அனுமதியும் அவர்களுக்கு மறுக்கப்பட்டது.

டோஹா பயங்கரவாதத்துக்கு உதவி செய்கின்றது என்று குற்றஞ்சாட்டி, கட்டார் நாட்டுடனான ராஜீக உறவுகளை, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பகறெய்ன், எகிப்து போன்ற நாடுகள் துண்டித்த போது, அல்ஜசீராவின் முழு ஊடக வலைப்பின்னலையும் மூடும்படியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

அந்த நேரத்தில், நால்வர் கொண்ட ஒரு குழு, தடைகள் நீக்கப்பட வேண்டுமானால் 13 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தது. அல்ஜசீராவைத் தற்காலிகமாக மூடுவதும் இக்கோரிக்கைகளில் ஒன்றாகும். இதன் காரணமாக மூன்று வருடங்கள் நீண்டு சென்ற அப்பிரதேச நெருக்கடிக்குள் அல்ஜசீராவும் தொடர்புபட வேண்டியிருந்தது.

**ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள்**

அதிகார மட்டங்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும் முயற்சியின் போது, பணியாளர்கள் கொல்லப்பட்ட நிகழ்வுகளே இந்த ஊடக வலைப்பின்னலை மிக அதிகமாகப் பாதித்த நிகழ்வுகளாகும். அல்ஜசீரா ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, தமது கடமையைச் செய்யும் நேரத்தில், 11 ஊடகவியலாளர்கள் தமது இன்னுயிர்களை ஈந்திருக்கிறார்கள்.

2003ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில், ஈராக்கின் தலைநகரான பக்தாத்துக்கு அருகில் உள்ள அல்-காக் (Al-Karkh) நகரத்தில் அமைந்திருந்த அல்ஜசீராப் பணிமனையின் மேல் ஓர் அமெரிக்கப் போர் விமானம் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயங்களுக்கு உள்ளாகி, செய்தியாளரான தாரிக் அயூப் இறந்தார் (Tariq Ayoub). “அந்தத் தாக்குதல் தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல்” என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் அப்போது தெரிவித்திருந்தார்.

25 வருடங்களை நினைவுகூரும் அல்ஜசீரா2004ம் ஆண்டில் ஈராக்கின் கார்பாலா (Karbala) நகரத்தில் அமெரிக்கத் துருப்புகளுக்கும் ஜாயிஷ்-அல்-மாஹ்தி (Jaish al-Mahdi) போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டை தொடர்பான செய்திகளை வழங்கிக் கொண்டிருந்த வேளையில் ராஷீட் வாலி சுட்டுக்கொல்லப்பட்டார்.

2011ஆம் ஆண்டில், கிழக்கு லிபியாவில் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பெங்காஸி நகரில் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தாக்குதலின் போது, ஒளிப்படக் கலைஞரான அலி ஹசன் அல் ஜாபர் (Ali Hassen Al Jaber) கொல்லப்பட்டார். பெங்காஸிக்கு (Benghazi) அருகில் இருந்த ஒரு நகரத்திலிருந்து பெங்காஸிக்கு, அலியும் அவரது சகாக்களும் ஒரு மகிழுந்தில் திரும்பிக்கொண்டிருந்த போது, இனந்தெரியாதவர்கள் அந்த மகிழுந்தின் மேல் மேற்கொண்ட ஒரு தாக்குதலில் அலி கொல்லப்பட்டார்.

**விமானக் குண்டுகளால் அழிக்கப்பட்ட பணிமனை**

25 வருடங்களை நினைவுகூரும் அல்ஜசீராகடந்த மே மாதம் 15ஆம் திகதி, இஸ்ரேல் படையினரின் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் காஸாத் துண்டில் (Gaza Strip) அல்ஜசீரா, அசோசியேற்றட் பிரெஸ் (The Associated Press) உட்பட ஏனைய செய்திச்சேவைகளின் ஊடகப் பணிமனைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு கோபுரம், 11 நாட்களாக அந்தக் கரையோரப் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் தாக்கி அழிக்கப்பட்டிருந்தது.

பதினொரு மாடிகளைக் கொண்டு, மக்களின் வதிவிடங்களையும் உள்ளடக்கியிருந்த அந்த அல்-ஜலாலாக் கட்டடத்தின் உரிமையாளருக்கு, மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்பதற்கு ஒரேயொரு மணித்தியால அவகாசம் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கோபுரம் இடிந்து வீழ்வதற்கு சில கணங்களுக்கு முன்னர் அதற்கு அருகில் அல்ஜசீராப் பணியாளர்கள் நேரலையாகச் செய்தி வழங்கிக் கொண்டிருந்தார்கள் என்று அல்ஜசீராவின் அந்தப் பணிமனைப் பொறுப்பாளரான வேல்-அல்-டாடூ தெரிவித்தார்.

நாங்கள் அந்த நேரத்தில் வழங்கிக் கொண்டிருந்த செய்தியின் மையப்பொருளாக நாங்களே மாறினோம். எங்கள் கண்களுக்கு முன்னால் அந்தக் கட்டடம் இடிந்து வீழ்வதை எமது செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்த முழு உலகத்துடன் இணைந்து நாங்களும் பார்த்தோம் என்று அல்-டாடூ நினைவு கூர்ந்தார். கவலையைத் தருகின்ற இவ்வாறான தருணங்கள் இருந்த போதிலும், அல்ஜசீராவின் விம்பமும் குரலும் தொடர்ந்து, உரத்து ஒலித்துக்கொண்டேயிருந்தது என்று அவர் மேலும் கூறினார்.

**மனிதர்களின் கதைகளை எடுத்துச் சொல்லல்**

“இவ்வாறான சவால்களின் நடுவிலும் சொல்லப்பட வேண்டிய விடயங்களை அல்ஜசீரா தொடர்ந்து சொல்லிக் கொண்டு தான் இருக்கிறது. எழுந்தமானமாக மேற்கொள்ளப்படும் கொலைகள், தடுத்துவைக்கப்படல், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், நீதியற்ற வழக்குகள், உளவியல், உடலியல் சித்திரவதைகள் போன்றவற்றுக்கு ஊடகவியலாளர்கள் உட்படுத்தப் படுவதை எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையைக் கண்டறிந்து, அந்த உண்மையை அனைவரும் அறியச் செய்வதே அவர்களது பணியாகும்” என்று அல்ஜசீரா ஊடக வலைப் பின்னலின் தற்காலிக இயக்குநரான மொஸ்தபா சுட்டிக் காட்டினார்.

உலகம் முழுவதும் வாழும் மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் பெறும் விடயங்கள் தொடர்பாக மக்கள் மனங்களில் ஒளியேற்றும் நோக்கத்துடன் இறந்த மற்றும் காயப்பட்ட தமது சக பணியாளர்களை நெஞ்சில் இருத்தி, அல்ஜசீரா தனது 25 ஆண்டை நினைவுகூருகின்றது. பல ஆபத்துகளும், தடைகளும் நிறைந்ததே இப்பாதை. இருப்பினும் மனிதரின் வாழ்வியற் கதையை எடுத்துச் சொல்லும் எமது பணியைத் தொடர்ந்து ஆற்றுவதில் நாம் மிகுந்த உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் இருக்கிறோம்.

- நன்றி: அல்ஜஸீரா

**“மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் பெறும் விடயங்கள் தொடர்பாக மக்கள் மனங்களில் ஒளியேற்றும் நோக்கத்துடன் இறந்த மற்றும் காயப்பட்ட தமது சக பணியாளர்களை நெஞ்சில் இருத்தி, அல்ஜசீரா தனது 25 ஆண்டு நிறைவை நினைவுகூருகின்றது. பல ஆபத்துகளும், தடைகளும் நிறைந்ததே இப்பாதை...**



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

11. அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகும். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?

(1) 41 (2) 42 (3) 43

12. ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.




அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?

(1) A (2) B (3) E

13. தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.

(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.

(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

14. வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| H | G | F | E |
| P | | | M |
| I | | | L |
| A | B | C | D |

(1)


| | |
|---|---|
| N | O |
| K | J |

(2)

| | |
|---|---|
| O | N |
| J | K |

(3)

| | |
|---|---|
| N | O |
| J | K |

15. 

X Y

கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

- **கமல், ராமு, வசி, அஜித் ஆகிய நான்கு நண்பர்கள் நாற்சந்தியில் நின்று விட்டு பிரிந்து சென்ற விபரம் தரப்பட்டுள்ளது.**

- கமல் என்பவர் வடக்குத் திசையில் சென்றார்.
- ராமு என்பவர் கமல் சென்ற திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.
- வசி என்பவர் கிழக்குத் திசையில் சென்றார்.
- அஜித் என்பவர் கமல், வசி சென்ற திசையின் மத்தியிலுள்ள திசைக்கு எதிர்த்திசையில் சென்றார்.

16. அஜித் சென்ற திசை யாது?

(1) வடமேற்கு (2) தென்கிழக்கு (3) தென்மேற்கு

17. 100 தொடக்கம் 110 வரை உள்ள எண்ணும் எண்களை இலக்கத்தில் எழுதும் போது பூச்சியம் எழுதப்படும் எண்களின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 11 (3) 10

18. பின்வரும் படங்களின் உதவியுடன் மாணவன் ஒருவன் கூறிய தகவல்களில் தவறெனக் கொள்ள முடியாத கூற்றைத் தெரிவு செய்க.




| பேசின் | கேத்தல் | குடம் | கோப்பை | கூசா |
|---|---|---|---|---|
| 5*l* | 2*l* 50*ml* | 10*l* 750*ml* | 350*ml* | 1*l* 750*ml* |

(1) கேத்தலில் உள்ள நீரையும் கோப்பையில் உள்ள நீரையும் சேர்த்தால் 2*l* 850*ml* வரும்.

(2) பேசின், குடத்தில் உள்ள நீரின் மொத்த அளவு 15*l* 750*ml* ஆகும்.

(3) கூசா, கோப்பையில் உள்ள நீரின் மொத்த அளவு 2050*ml* ஆகும்.

19. அருகே தரப்பட்டுள்ள கனவுருவில் புள்ளிக் கோடிடப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின் காணப்படும் பக்கங்கள், உச்சிகளின் எண்ணிக்கைகள் எத்தனை?



(1) பக்கங்கள் - 7 உச்சிகள் - 7

(2) பக்கங்கள் - 7 உச்சிகள் - 6

(3) பக்கங்கள் - 6 உச்சிகள் - 8

20. சந்தையில் மரக்கறி வியாபாரி ஒருவர் தனது வாடிக்கையாளரிற்கு பூசனிக்காயைக் கொடுப்பதற்காக ஒரு பூசனிக்காயை தராசின் ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் 2 கிலோகிராம் படிக்கல்லை வைத்தார். மேலும் பூசனிக்காய் உள்ள தட்டில் சில படிக்கற்களை வைத்தபோது தராசு சமநிலையில் காணப்பட்டது. பூசனிக்காயின் நிறை 1 கிலோகிராம் 625 கிராம் எனின் வியாபாரி பூசனிக்காய் உள்ள தட்டில் வைத்த படிக்கற்கள் எவை?

(1) 200g, 100g, 70g, 5g (2) 300g, 40g, 30g, 5g (3) 200g, 100g, 50g, 20g, 5g

ஈழநாடு

# சீனாவின் கோரிக்கையை ஏற்றால் அது இலங்கைக்கு மரண அடியாகும்

## கலாநிதி தயான் ஜயதிலக எச்சரிக்கை



**“சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உரத்தை இலங்கையிலுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அரச நிறுவனமொன்று நிராகரித்துள்ள நிலையில், மீளாய்வுக்காக மூன்றாம் தரப்பை நாடுவது பாரிய தவறாகும். அந்தத் தவறை அரசு செய்யக்கூடாது. அது பயங் கரமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துவிடும்.”**

- இவ்வாறு சர்வதேச இராஜ தந்திரியும் அரசியல் விமர்ச கருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சேதன பசளையில் தீங்கு விளைவிக்கும் பக்டீரி யாக்கள் இருப்பதாக இலங்கை யிலுள்ள அரச நிறுவனம் (தேசிய தாவரங்கள் தொற்று நீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம்) ஆய்வுமூலம் அறி வித்துள்ளது. ஒரு தடவைகள் அல்ல இரண்டு தடவைகளுமே நிராகரிக்கப்பட்டுள்ளது. குறித்த அரச நிறுவனத்தில் கற்றவர்களே இருக்கின்றனர்.

எனினும், இலங்கை நிறுவனத்தால் மேற்கொள் ளப்பட்ட பரிசோதனை முடிவை ஏற்கமுடியாது எனவும், சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன் றாம் தரப்பிடம், உரமாதிரி களை வழங்கி மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் சீன நிறு வனம் அறிவித்துள்ளது. சீன நிறுவனத்தின் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்கும் பட் சத்தில் அது பாரிய பிரச் னைகளுக்கு வழிவகுத்துவிடும்.

இலங்கையின் நீதி கட்டமைப்பு மீது நம்பிக்கை இல்லை, எனவே, மனித உரிமை மீறல்கள் தொடர் பில் சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பு ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டால் என்ன செய்வது? ஏற்கனவே, ஐ.நா. மனித உரிமைகள் சபை, சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஆகியன மேற்படி கோரிக் கையை விடுத்து வருகின்றன.

எனவே, சீன நிறுவனத்தின் கோரிக்கையை அரசு ஏற்கும் பட்சத்தில் அது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும். மேலும், பல பயங்கரமான பிரச்சினைகளில் சிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, மூன்றாம் தரப்பு கோரிக்கையை அரசு ஏற்கவேகூடாது. அவ்வாறு ஏற் றால் அது இலங்கையின் இறை யாண்மைக்கும் மரண அடியாக அமையும்” - என்றார். (இ)



## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 05

ஸ்கொட்லாந்தின் க்ளாஸ்கோ நகரில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர் பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்பினார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் எமிரேட்ஸ் விமானம் மூலம் ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் ஆகியோர் நாட்டை வந்தடைந் தனர்.

காலநிலை மாற்றம் தொடர் பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வ தற்காக ஜனாதிபதி கடந்த 30ஆம் திகதி ஸ்கொட்லாந்து பயணமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரி குறைப்பு

கொழும்பு, நவ. 05

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான விசேட இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் சம்பா, நாட்டு அரிசி மற்றும் பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் ஒன்றுக்கு இறக்குமதி வரி 25 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. (இ)

## சதொசவில் பொருட்களை வாங்குவதற்குக் கட்டுப்பாடு

### அரிசி, சீனி மட்டும் கொள்வனவு செய்வதற்கு அனுமதியில்லை

கொழும்பு, நவ. 05

சதொச விற்பனையகங்களில் நேற்று முதல் அரிசி மற்றும் சீனி ஆகியனவற்றை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு இடமளிக்கப் படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன வெளியிட்டுள்ளார்.

இதன்படி, அரிசி மற்றும் சீனி என்பவற்றுக்கு மேலதிகமாக மேலும் 5 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

## ஆணின் சடலம் மீட்பு!

இரத்தினபுரி, நவ. 05

இரத்தினபுரி, அயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிம்புர பிரதேசத்தில் கற்பாறை களுக்கு இடையிலிருந்து ஆணொருவரின் சடலத்தை அயகம பொலிஸார் மீட்டுள் ளனர் என்று பொலிஸ் தலை மையகம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, பிம்புர பிர தேசத்தைச் சேர்ந்த 27 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி வைத்தியசாலை யின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அயகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (இ)



## பூஸா சிறைச்சாலையில் மேலும் 10 கைதிகளுக்குக் கொரோனா!

காலி, நவ. 05

காலி பூஸா சிறைச்சாலை யில் மேலும் 10 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 42 கைதிகளுக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனை யிலேயே 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொற்றாளர்களு டன் தென் மாகாணத்திலுள்ள சிறைச்சாலைகளில் கொரோ னாத் தொற்றுக்குள்ளானவர்க ளின் எண்ணிக்கை 1,693 ஆக உயர்வடைந்துள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாயலயம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 05

மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் டெங்கு நோயா ளர்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஷிரந்தி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாளாந்தம் 30 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர். அதிலும் மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான



நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இது மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் 68 வீதம் ஆகும்.

மேலும், கண்டி, காலி, மாத்தறை, குருநாகல், பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங் களிலும் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அண்மைக்காலமாக கொரோனாத் தொற்றுடன் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத போதிலும், டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட் டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

பாடசாலைகளில் அனைத்து வகுப்புக்களையும் மீள ஆரம்பிப்பதற்கு முன், பாடசாலை சூழலை சுத்தம் செய்யுமாறு சுகாதார அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதேவேளை, நாட்டில் டெங்கு நோயால் இவ்வருடம் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இந்த வருடத்தில் இதுவரை 21 ஆயிரத்து 646 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள னர். (இ)

ஈழநாடு



# அத்தியாவசியப் பொருள்களை வாங்கிச் சேமிக்கும் சீன மக்கள்

## தைவானுடன் போர் மூளும் என்று சமூக ஊடகங்களில் பரவும் வதந்தி

பீஜிங், நவ. 05

அத்தியாவசியப் பொருள்களை வாங்கிப் பத்திரப்படுத்தி வைக்கு மாறு சீனாவின் வர்த்தக அமைச்சு விடுத்த அறிவித்தலை அடுத்து தலைநகரில் மக்கள் விழுந்தடித்துக் கொண்டு பொருள்களை வாங்கிச் சேமித்து வருகின்றனர்.

குளிர்காலம் நெருங்குவதாலும் தொற்று நோய்ப் பரவல் அதிகரிப்ப தாலும் அத்தியாவசியப் பொருள் களது விநியோகம் குறிப்பாக மரக் கறி, இறைச்சி வழங்கல்கள் தடைப் படலாம் என்று எதிர்பார்க்கப்படு கிறது. அதனால் விநியோகங்கள் தடையின்றி நடப்பதை உறுதிப்ப டுத்துமாறு முகவர்களுக்கு அறிவு றுத்தல் விடுத்த வர்த்தக அமைச்சு, அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து வைக்குமாறு நாட்டு மக்க ளுக்கும் ஆலோசனை தெரிவித்துள் ளது. அமைச்சு விடுத்த இந்த அறி விப்பு வழமையான ஒன்றுதான். அதனால் பதற்றப்பட்டுப் பொருள் களை வாங்கிச்செயற்கைத் தட்டுப் பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என்று பத்திரிகைகள் செய்தி வெளி யிட்டுள்ளன. ஆனாலும் பீஜிங் நகர மக்கள் சீனி, மா, அரிசி, எண்ணெய் போன்ற பல பொருள்களை வாங் கிச் சேமிப்பதில் தீவிரமாக ஈடுபட்



டுள்ளனர் என்று செய்திகள் வெளி யாகியுள்ளன.

அமைச்சு விடுத்த அறிவுறுத்தல் சீனாவின் பிரபல சமூக ஊடகத் தளத்தில் வெவ்வேறு விதமாகப் பரப்பப்பட்டதால் மக்கள் மத்தி யில் பதற்றம் உருவாக்கப்பட்டுள்ள தாக "சவுத் சைனா மோர்னிங் போஸ்ட்" பத்திரிகை தெரிவித்துள் ளது. தைவானுடன் போர் மூள வுள்ளதை அடுத்தே அரசு பொருள் களை வாங்கிப் பத்திரப்படுத்து மாறு கேட்கிறது என்றும் தகவல் கள் பகிரப்பட்டுள்ளன என்று அப்பத்திரிகை கூறுகிறது.

பெப்ரவரியில் குளிர் கால ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்ப மாகவுள்ளன. அதற்கு முன்பாக நாட்டில் இருந்து வைரஸை த்துடைத்து அகற்றி விடலாம் என்று சீனா போட்ட கணக்குப் பொய்த்துப்போய் விட்டது. டெல்ரா வைரஸின் புதிய வடி வங்கள் நாட்டின் பல மாகாணங்களிலும் வேகமாகப் பரவி வரு கின்றன. குளிர் காலத் தில் தொற்றுக்கள் இன்னும் பெரு கலாம் என எதிர்பார்க்கப்படுவதால் பொது முடக்கங்கள் வரலாம் என்று மக்கள் காத்திருக்கின்றனர்.

தொற்று ஏற்படும் பகுதிகளை எவரும் வெளியேறாத விதமாக மிக இறுக்கமாக மூடி முடக்கும் நடை முறைகளைச் சீன அதிகாரிகள் கடைப்பிடித்துவருகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஷங்காய்நகரில் உள்ள டிஸ்னி லான்ட் கேளிக்கைப் பூங்காவில் தொற்றாளர் ஒருவர் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து பூங்கா இருதினங் கள் முற்றாக மூடப்பட்டது. (அ)

# பாரிஸ் பிராந்தியப் பள்ளிகளில் மீண்டும் மாஸ்க் கட்டாயமாகிறது

## தொற்று அதிகரிப்பதால் அச்சம்



பாரிஸ், நவ. 05

அடுத்த வாரம் பாட சாலைகள் தொடங்கும் போது வகுப்பறைகளில் மாணவர்கள் மீண்டும் மாஸ்க் அணிய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் சில நாட்களாக வைரஸ் தொற்றுக்கள் அதிகரிப்பதை அடுத்தே முன்னெச்சரிக்கை நடவ டிக்கையாகப் பள்ளிகளில் மாஸ்க் அணிவதை அரசு கட்டாயமாக்கியிருக்கிறது.

பாரிஸ் பிராந்தியத்தின் அனைத்து மாவட்டங்கள் அடங்கலாக நாடெங்கும் 39 மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளிலேயே மாஸ்க் அணிவது கட்டாயமாக் கப்படுகிறது. அரசாங்கப் பேச்சாளர் கப்ரியேல் அட்டால் இதனை அறிவித்துள்ளார்.

தொற்று நிலைவரம் சற்று மெலெழுவதால் சுகாதார விதிகள் சிலவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண் டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தொற்று வீதம் ஒரு லட்சம் குடியிருப்பாளருக்கு 50 என்ற அளவைத் தாண்டியுள்ள மாவட்டங்களிலேயே பாடசாலைகளில் மீண்டும் அடுத்த கட்ட விதிகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன.

அனைத்துப் புனிதர்கள் நாள் விடுமுறைக்குப் பின்னர் பாடசாலைகள் எதிர்வரும் திங்களன்று தொடங்குகின் றன. வகுப்பறைச் செயல்பாடுகள் வைரஸ் தொற்றுவிதத்தை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பாவில் இங்கிலாந்து, ஜேர்மனி பெல்ஜியம், டென்மார்க் போன்ற நாடுகளில் வைரஸ் தொற்றுக்கள் அதிகரித்துள்ளன. கணிசமான எண்ணிக்கையானோர் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளதால் நோயின் தீவிர நிலையை எட்டுவோரது.

எண்ணிக்கை இந்தத் தடவை மிகவும் குறைவாக உள்ளது. அதனால் மருத்துவமனைகளில் முன்னரைப் போன்ற நெருக்கடிகள் இன்னமும் ஏற்படவில்லை.

வெப்பநிலை குறைந்து வருவது வைரஸ் பரவலுக்குச் சாதகமானது என்பதால் அடுத்து வருகின்ற நாட்களில் புதிய தொற்றலைகளைச் சில நாடுகள் சந்திக்கக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# வலுவிழந்த இஸ்ரேல் அமைச்சரிடம் மன்னிப்புக்கேட்ட பிரிட்டிஷ் பிரதமர்

## சக்கர நாற்காலியுடன் மாநாட்டுக்கு வந்தவர் போக வழியின்றி ஏமாற்றம்

கிளாஸ்கோ, நவ. 05

இஸ்ரேல் நாட்டின் எரிசக்தி அமைச்சராகப் பதவி வகிப்பவர் கரீன் எல்ஹாரர் என்ற பெண் ஆவார். தசை நார்வுத் தேய்வினால் பாதிக் கப்பட்டு வலுவிழந்தவர்.



கிளாஸ்கோவில் நடைபெறுகின்ற பருவ நிலை உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சக்கர நாற்காலியில் வருகை தந்த அவர் நீண்ட நேரம் காத்திருந்தும் மாநாட்டு மண்டபத்தினுள் செல்ல முடியவில்லை.

வலுவிழந்தவர்கள் சக்கர நாற் காலியுடன் மண்டபத்திற்குள் செல்லக் கூடிய வசதிகளை மாநாட்டின் ஏற்பாட் டாளர்கள் செய்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் இஸ்ரேலின் சார்பில் வருகை தந்த அந்தப் பெண் அமைச்சர் கடந்த திங்களன்று இஸ்ரேலியப் பிரத மருடன் இணைந்து மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வுகளில் பங்குகொள்ள முடியா மற் போனது. அது குறித்து அவர் தனது ருவீற்றர் தளத்தில் வலுவிழந்தோருக்கு ஐ. நா. வசதி செய்யத் தவறியமைக்கு வருந்துவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

மண்டபத்துக்கு வெளியே இரண்டு மணி நேரம் காத்திருந்து விட்டு 50 மைல் கள் தொலைவில் உள்ள தனது விடுதிக்கு அவர் திரும்பிச் செல்ல நேர்ந்தது.

எனினும் மாநாட்டின் மற்றைய நிகழ்வுகளில் அவர் பங்குபற்றுவதற்கு விசேட வசதிகள் செய்யப்பட்டன. வலுவிழந்த அமைச்சருக்கு நேர்ந்த இந்தச் சம்பவத்துக்காக பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் அவரிடம் நேரடியாக மன்னிப்புக் கோரியுள்ளார். பிரிட்டிஷ் சுற்றுச் சூழல் அமைச்சரும் இந்தச் சம்பவம் குறித்து வருத்தத்தையும் மன்னிப்பையும் வெளியிட்டிருக்கிறார்.

மாநாட்டு மண்டப வாயில்களில் சக்கர நாற்காலிகள் செல்லக்கூடிய வாறான வசதிகள் செய்யப்படாமையால் நேர்ந்தஇந்தச் சம்பவம் தங்களது எதிர்கால மாநாடுகளை ஏற்பாடு செய்வதில் ஒரு அனுபவப் பாடமாக அமைந்து விட்டது என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

# முகஅடையாளம் காணும் சேவையை கைவிடுகின்றது பேஸ்புக் நிறுவனம்

முக அடையாளம் காணும் சேவையை கைவிடுவதாக பேஸ்புக் நிறுவனம் அறி வித்துள்ளது.

பேஸ்புக் தனது தாய் நிறுவனத்தின் பெயரை மெட்டா என கடந்த வாரம் மாற்றியது. இந்நிலையிலேயே பேஸ்புக் நிறுவனம் வழங்கி வந்த முக அடையா ளம் காணும் சேவையை கைவிடுவதாக அறிவித்துள்ளது. இது தொடர்பான வழி காட்டுதல்களை பல நாடுகள் வெளியிடாத நிலையில் அதை கைவிடுவதாகவும் 100 கோடி பேரின் முக அடையாளங்களை நீக்குவதாகவும் தெரிவித்துள்ளது.

பேஸ்புக்கின் கீழ் பல நிறுவனங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. இன்னும் பல நிறுவனங்கள் அதன் கீழ் வரவிருக்கின் றன. அப்படி இருக்கும்போது அது பேஸ்புக்காக, சமூக வலைதள நிறுவன மாக மட்டுமே அறியப்படுவது சரியல்ல என்று இந்தப் புதிய பெயரை வைத்துள் ளார் மார்க். சமூக வலைதள விஷயங்க ளில் ஏற்படும் சர்ச்சைகள் மொத்த நிறுவ னத்தையும் பாதிக்கக்கூடாது என்பதிலும் தெளிவாக இருக்கிறார் மார்க். இந்த 'மெட்டா' என்னும் பெயர் அவரது கனவுத்திட்டமான மெட்டாவெர்ஸிலி ருந்து வந்தது. கடந்த சில வருடங்களா கவே 'மெட்டாவெர்ஸ்' உருவாகும் முயற்சியில் பேஸ்புக் அதீத ஈடுபாடு காட்டி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# சீன முன்னாள் துணைப் பிரதமர் ஜாங் கவ்லீ மீது ரென்னிஸ் வீராங்கனை பாலியல் குற்றச்சாட்டு!

பீஜிங், நவ. 05

சீனாவின் முன்னாள் துணை பிரதமர் ஜாங் கவ்லீ பாலியல் ரீதியான உறவுக்கு அழைத்து தன்னைக் கட்டாயப்படுத்தி துன்புறுத்தினார் என ரென்னிஸ் வீராங் கனை பெங் ஷ்வை குற்றஞ்சாட்டி யுள்ளார்.

ஜாங் கவ்லீயின் வீட்டுக்குச் சென்ற போது இவ்வாறு பாலியல் ரீதியாக தான் துன்புறுத்தப்பட்டதாகவும் அதை நிரூ பிக்கத் தன்னிடம் ஆதாரங்கள் இல்லை என்றும் பெங் ஷ்வை கூறியுள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்க்கு நெருக்கமானவரான ஜாங் கவ்லீ மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து ஜாங் கவ்லீ இது வரை எந்தக் கருத்துக்களையும்



வெளியிடவில்லை.

தற்போது 75 வயதாகும் ஜாங் கவ்லீ 2013 முதல் 2018 -ஆம் ஆண்டு வரை சீன துணைப் பிரதமராக இருந்தார்.

இதேவேளை, பெங் ஷ்வை மீதான பாலியல் புகார் வெளியாகியுள்ள நிலை யில் அவர் குறித்த இணையத் தேடல் களை சீன அரசு கட்டுப்படுத்தியுள்ளது.

## மோ. சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட எழுவர் சிக்கினர்

கொழும்பு, நவ. 05

குருநாகல் நாரம்மல, தம்பதெனிய எபலதெனிய, பன்னல மற்றும் வடுமுன்ன ஆகிய பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட எழுவரை ஏழு மோட்டார் சைக்கிள்களுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நாரம்மல, குளியாப்பிட்டிய, மெட்டியகனே, வெல்பல்ல, தம்பதெனிய, வடுமுன்னே கெதர மற்றும் பன்னல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த எழுவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(இ)

## மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, நவ. 05

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல்வேறு மாவட்டங்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாயம் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா, கேகாலை, கண்டி, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாயம் நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டம் பிரிவு 42(2)இன் அடிப்படையிலான விண்ணப்பம்

வழக்கு இல.
நானாவிதம்/417/2021
தன்மை: நானாவிதம்
முறை: சாதாரணம்
பெறுமதி: 14 மில்லயன்

1. **பூலோகசிங்கம் சிவநேசன்**
   தலைவர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.29/20, உடையார் ஒழுங்கை ,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
2. **நல்லசிவன் சந்திரசேகரன்**
   செயலாளர்- விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.2A, ஐயனார் கோவில் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
3. **கந்தையா புஸ்பராசா**
   உப தலைவர்-விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.08, சிவப்பிரகாசம் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
4. **பத்மநாதன் சக்திவேல்**
   பொருளாளர்- விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.09, சிவப்பிரகாசம் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
5. **வேலாயுதபிள்ளை வெற்றிவேல்**
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.22, ஐயனார் கோவில் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
6. **நமசிவாயம் கிரிகரன்**
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.57, ஓடை ஒழுங்கை,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
7. **முருகேசு ஜெகதீஸ்வரன்**
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.6/6, ஐயனார் கோவிலடி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
8. **சண்முகசுந்தரம் சிவகுமரன்**
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.29, ஒட்டுமடம் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
9. **காசிப்பிள்ளை ஜெகதீசன்**
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.29/17, உடையார் ஒழுங்கை ,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

மனுதாரர்கள்

மேற்படி இலக்க வழக்கில் விசுவேசப்பிள்ளையார் கோவிலின் பரிபாலனசபை உறுப்பினர்களான மேலே குறிப்பிட்ட மனுதாரர்களினால் இவ்வழக்கைத் தாக்கல் செய்து மனுவின் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விசுவேசப்பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான ஆதனத்தை விற்பனை செய்வதனை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட வழக்கில் மனுவில் கோரபப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 30.11.2021ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி கோப்பிடுமாறு அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது எதிர்வரும் 30.11.2021ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

திகதி: 03.11.2021

அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டம் பிரிவு 42(2)இன் அடிப்படையிலான விண்ணப்பம்

வழக்கு இல.
நானாவிதம்/417/2021

1. பூலோகசிங்கம் சிவநேசன்
   தலைவர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.29/20, உடையார் ஒழுங்கை,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
2. நல்லசிவன் சந்திரசேகரன்
   செயலாளர்- விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.2A, ஐயனார் கோவில் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
3. கந்தையா புஸ்பராசா
   உப தலைவர்-விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.08, சிவப்பிரகாசம் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
4. பத்மநாதன் சக்திவேல்
   பொருளாளர்- விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.09, சிவப்பிரகாசம் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
5. வேலாயுதபிள்ளை வெற்றிவேல்
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.22, ஐயனார் கோவில் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
6. நமசிவாயம் கிரிகரன்
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.57, ஓடை ஒழுங்கை ,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
7. முருகேசு ஜெகதீஸ்வரன்
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.6/6, ஐயனார் கோவிலடி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
8. சண்முகசுந்தரம் சிவகுமரன்
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.29, ஒட்டுமடம் வீதி,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
9. காசிப்பிள்ளை ஜெகதீசன்
   உறுப்பினர் - விசுவேசப்பிள்ளையார் கோவில்
   இல.29/17, உடையார் ஒழுங்கை,
   வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

மனுதாரர்கள்

மேற்படி இலக்க வழக்கில் விசுவேசப்பிள்ளையார் கோவிலின் பரிபாலனசபை உறுப்பினர்களான மேலே குறிப்பிட்ட மனுதாரர்களினால் இவ்வழக்கைத் தாக்கல் செய்து மனுவின் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விசுவேசப்பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான ஆதனத்தை விற்பனை செய்வதனை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட வழக்கில் மனுவில் கோரபப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 30.11.2021ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி கோப்பிடுமாறு அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது எதிர்வரும் 30.11.2021ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

திகதி: 03.11.2021

DAN
2021 இன்
சாதனைத் தமிழன்
உங்கள் தெரிவுகளை அனுப்பிவையுங்கள்
அவர்களில் ஒருவரை எமது தெரிவுக்குழு தேர்ந்தெடுக்கும்
No : 707, Hospital Road, Jaffna
021 492 7806

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 05 - 1928

இறப்பு 02 - 11 - 2021



### சவரிமுத்து மரியாம்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வதிவிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து மரியாம்பிள்ளை அவர்கள் 02.11.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - வெரோணிக்கா தம்பதியரின் அன்பு புத்திரரும், அன்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், சத்தியநாதன் (ஜேர்மனி), ராஜநாதன் (ஜேர்மனி), ஜெகநாதன்(லண்டன்), சாந்தி(இலங்கை), யோகநாதன்(கனடா), விஜயநாதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யூட், சுபா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான மனுவல்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, ஞானம்மா, வரப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அருள்மேரி, மரிஸ்ரெலா, காலஞ்சென்ற கந்தையா, பராசக்தி, மரிய அருமை நாயகம், மேரி றோஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜொய்சி, பிறின்சி, றோய் றிக்யஸ், காலஞ்சென்ற சகுந்தலா, றோசினி, கமலா, நிசங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், மெலானி, நிசானி, கிரிஷிக்கா, பிரசாந்த், செபஸ்ரியன், டானி, டானியல், ஜெனிக்கா, பிரியங்கா, ஜொவிற்றா, நெவின், எய்டன், ஜெய்டன், நிக்கி, யூடி ஆகியோரின் அன்புப் பேரனும், றியா, கியாறா, லியான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

*பார்வைக்கு*
Friday, 05 Nov 2021 6:00 PM - 9:00 PM
Saturday, 06 Nov 2021 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave> Markham, ON L3R 5G1, Canada

*திருப்பலி*
Saturday, 06 Nov 2021 10:00 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive> Markham, ON L3R 3R6, Canada

*நல்லடக்கம்*
Saturday, 06 Nov 2021 11:30 AM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**விஜயநாதன்(மகன்)**
+14168849271

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# எம்முடன் இணைந்து நாட்டை பாதுகாக்கப் போராடுங்கள்!

## மொட்டுவின் பங்காளிகளுக்கு சஜித் அழைப்பு



**கேகாலை, நவ. 05**

**"தன்மானம் இருப்பின் அரசுக்குள் இருந்து கொண்டு நாடகமாடாமல் உடனடியாக வெளியேறுங்கள். எம்முடன் இணைந்து நாட்டைப் பாதுகாக்கப் போராடுங்கள்."**

*- இவ்வாறு மொட்டு கூட்டணியிலுள்ள பங்காளிக் கட்சிகளுக்கு சவால் விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.*

*கேகாலையில் நடைபெற்ற அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே சஜித் மேற்கண்டவாறு சவால் விடுத்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-*

*"தவறிழைத்துவிட்டோம், அன்று சித்திரம் வரைந்த இளைஞர்கள் இன்று நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என இன்று சிலர் கவலை வெளியிடுகின்றனர். இவ்வளவு நாள் நித்திரையிலா இருந்தார்கள்?*

*வடக்கையும், தெற்கையும் விற்கும்போது பங்காளிகள் அரசுக்குள்தான் இருந்தார்கள். நாட்டைக் காட்டிக்கொடுக்கும் அமைச்சரவைப் பத்திரம் வரும்போது அமைச்சரவையிலும் இருந்தனர். எனவே, தற்போது நாடகமாடுகின்றனர்.*

*தன்மானம் இருப்பில் அரசிலிருந்து வெளியேறி, நாட்டைப் பாதுகாக்க எம்முடன் இணைந்து போராடுமாறு சவால் விடுக்கின்றேன்" - என்றார்.* (இ)

# யாழில் வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட 10 சிறுவர்கள் சிக்கினார்கள்

*யாழ்ப்பாணம், நவ. 05*

*யாழ்ப்பாணத்தில் சிறுவர்களால் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 10 சிறுவர்கள் யாழ். குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*யாழ். நாவாந்துறைப் பகுதியில் அண்மையில் 14 வயது சிறுவன் மீது 10 பேர் கொண்ட அணி ஒன்று வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டது. அதில் அச்சிறுவன் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.*

*முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புபட்டனர் என்று முறையிடப்பட்ட 10 பேரையும் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்ற அதிர்ச்சிச் செய்தியை பொலிஸார் வெளியிட்டதுடன் அவர்கள் அனைவரும 14 தொடக்கம் 17 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், அவர்கள் யாழ். நகரம், நாவாந்துறை, அத்தியடி, நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வாள், கைக்கோடாரி என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*யாழில் இளைஞர்களின் அடாவடி மற்றும் வாள்வெட்டு வன்முறைகள் கட்டுப்பாடு இன்றி நடைபெற்றுவரும் நிலையில் சிறுவர்கள் கூரிய ஆயுதங்களை உடமையில் வைத்து குழுவாக இணைந்து இப்படிப்பட்ட வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்டமையானது பொலிஸார் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.*

*குறித்த கைது நடவடிக்கைகள் யாழ். குற்றத் தடுப்புப் பிரிவு பதில் பொறுப்பதிகாரி குமாரபேலி தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான விஜயகாந்த், கபில்தாஸ், செனரத்னா, கஜான் போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்டன.*

*கைதுசெய்யப்பட்ட சிறுவர்கள் அனைவரும் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.* (இ - 03)

# தம்பலகாமத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு!

*திருகோணமலை, நவ. 05*

*திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உல்பத்வெவ பகுதியில் வீடொன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*இந்தச் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது எனத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*சடலமாக மீட்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த டபிள்யூ.ஏ.நளீன் சமிந்த (40 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*குறித்த நபர் இரண்டாவது மனைவியுடன் தனியாக வீட்டில் வசித்து வந்தார் எனவும், கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.*

*உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.* (இ)

# வவுனியாவில் மேலும் 16 பேருக்குக் கொரோனா

*வவுனியா, நவ. 05*

*வவுனியாவில் 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.*

*வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.*

*அதில், நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 வயதுடைய இரு சிறுவர்களுக்கும், பரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 3 வயது சிறுமி ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு வயது சிறுவன் ஒருவருக்கும் என 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இதையடுத்து தொற்றாளர்களைச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.* (இ)

### அமெரிக்கா...

ளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எமது நாட்டின் மின்வழங்கல் துறையை பிறருக்குக் கையளிப்பதற்கும் அத்துறையை முழுமையாக சீரகுலைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்திருப்பதன் விளைவாகவே மின்சார சபை ஊழியர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கெரவலப்பிட்டி யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிராக அவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டுள்ளனர். எனவே, இதற்கு ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரசும் பொறுப்புக்கூற வேண்டும்.

இவ்விவகாரத்தைப் பொறுத்தமட்டில், இதுவொரு வெளிநாட்டு முதலீடு என்று கூறப்படுகின்றது. ஆனால், அதில் எவ்வித உண்மையும் இல்லை. மாறாக இதன்விளைவாக எமது நாட்டுக்கு சொந்தமான நிதி வெளிநாடொன்றின் வசமாகப்போகின்றது.

'யுகதனவி' மின்னுற்பத்தி நிலையமானது, ரூபாயில் செலுத்தவேண்டிய ஒரு தொகுதி கடன்களையும் டொலர்களில் செலுத்த வேண்டிய பிறிதொரு தொகுதி கடன்களையும் கொண்டிருக்கின்றது.

அதன்படி டொலர்களில் செலுத்த வேண்டிய கடன்தொகை அடுத்த வருட ஆரம்பத்துடன் முடிவடையும். அதன் பின்னர் ரூபாயில் செலுத்தவேண்டிய கடன் மாத்திரமே எஞ்சியிருக்கும். எனவே, உண்மையில் 'யுகதனவி' மின்னுற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகள் மூலம் எதனைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது?" - என்று கேள்வி எழுப்பினார். (இ)

### மட்டக்களப்பு...

வைத்தியசாலைக்கு சொந்தமான தொழுநோய் வைத்தியசாலை மற்றும் முருகன் கோவில், கத்தோலிக்க தேவாலயம் உட்பட மதஸ்தலங்களும் காணப்படுகின்றன.

அத்தோடு இலங்கையில் வரலாற்று ரீதியாக குறித்த பிரதேசம் பறவைகள் சரணாலயமாக உள்ளது.

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் திடீரென படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாந்தீவு பிரதேசத்துக்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கு அங்கு நின்ற படையினர் அனுமதி மறுத்துள்ளதோடு பாதுகாப்பு அமைச்சில் அனுமதி எடுத்து வருமாறு கோரியுள்ளனர்.

இதுவரை காலமும் சுகாதார அமைச்சுக்கு சொந்தமாக இருந்து வந்த மாந்தீவு பிரதேசம் எப்போது பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டது என்ற விடயம் யாருக்கும் தெரியாத நிலையில் அங்கு விமானப்படைக்கு சொந்தமான படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டபோது, குறித்த பிரதேசத்தில் விமானப்படைக்கு சொந்தமான தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்று தற்காலிகமாக இயங்கி வருவதாகவும் நிரந்தர படை முகாம் ஒன்றுக்கான அனுமதி கோரப்பட்டபோதும் அதற்கான எந்த உத்தியோகபூர்வ அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதார அமைச்சுக்கு சொந்தமான குறித்த பிரதேசத்தில் விமானப்படை முகாம் அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதனை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு மறுப்பு தெரிவித்து வந்த நிலையில் தற்போது குறித்த படை முகாம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### மக்களை...

வித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கலைஞர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் சமூகம் பல்வேறு வழிகளிலும் கூறுபட்ட நிலையில் இருக்கின்றது. அதனைக் கலைகள் ஊடாக ஒன்றிணைக்க முடியும். அதனால் அதனை இனங்கண்டு நாம் முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றோம். கலைகள் மூலமாகவே பிரிந்து போயுள்ள சமூகங்களை ஒன்றிணைக்க முடியும்.

அதனால் நாட்டின் கலைகள் தொடர்பில் தேசிய ரீதியில் நிலையான கொள்கை வகுக்கப்படும். இந்த மாவட்டத்தின் கலைஞர்கள் முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் அவர்களது சிபார்சுகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதுடன், அதனை தீர்த்து வைக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

எமது பாடசாலைப் பிள்ளைகளுக்கும் கலைகள் தொடர்பில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். கலைகளில் ஆர்வம் உள்ள சிறுவர்களை இனங்கண்டுள்ளோம். அவர்களையும் இணைத்துக் கொண்டு நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். களத்தில் கலைஞர்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்குகிறார்கள். அதனை ஆராய்ந்து பட்டியல்படுத்தி எமது அமைச்சுக்கு தர முடியும். மக்களை திருப்திப்படுத்துவது மற்றும் மக்களை சந்தோசப்படுத்துவது தொடர்பில் நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும். தேர்தல் காலங்களில் மக்களை வீடு வீடாகச் சென்று மதிக்கிறார்கள். தேர்தல் முடிந்த பின் மக்கள் தான் தேர்தலில் வென்றவர்களை தேட வேண்டியுள்ளது. அதுதான் நடக்கிறது. அந்த நிலை மாறி மக்களுக்காக பணியாற்றவேண்டும்-என்றார். (அ)

### கராப்பிட்டி...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஷெல்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

அந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை 399 அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த பரிசோதனைகளில் 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, 92 பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த பரிசோதனையிலும் 12 பேருக்கு தொற்று உறதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும், 24 மணிநேரத்தில் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில், 24 மணிநேரத்தில் இந்த வைத்தியசாலைக்கு புதிதாக 20 கொரோனா நோயாளர்கள் சிகிச்சைக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் இதுவரை 62 கொரோனா நோயாளர்கள் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனரெனவும் அவர் கூறினார்.

### இலங்கையில்...

சீனா தனது இராணுவ பலத்தை பரந்த பிரதேசங்களில் நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளது. இலங்கை உட்பட 13 நாடுகளில் சீனா இராணுவ தளங்களையும், இராணுவத்துக்கு வசதி வழங்கும் நிலையங்களையும் நிறுவுவதற்கு இடமுள்ளது.

இலங்கை தவிர கம்போடியா, சிங்கப்பூர், மியன்மார், தாய்லாந்து இந்தோனேசியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலேயே சீனா இந்தத் தளங்களை நிறுவவுள்ளது.

சீனா தமது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையை வலுப்படுத்துவதற்கு இதன் மூலம் எதிர்பார்ப்பதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தொற்றாளர் தொகை உயர்வு நேற்று 592 பேர் அடையாளம்

கொழும்பு, நவ. 05

நாட்டில் மேலும் 592 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 43 ஆயிரத்து 385 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் 354 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதனடிப்படையில், இதுவரை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 234 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். (இ)

## புத்தளம் ஆரம்பப் பாடசாலையில்

# 4 மாணவர்களுக்கு கொரோனா உறுதி

புத்தளம், நவ. 05

புத்தளம், ஆனமடுவ பிரதேசத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நான்கு மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனமடுவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ரவி அபே ரத்ன இந்தத் தகவலை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்றுக்குள்ளான சிறுவர்களில் இரு சிறுவர்கள் ஏற்கனவே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் பாடசாலையில் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஏனைய மாணவர்களைப் பாடசாலைக்கு வரழைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பயண பையிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு



கொழும்பு, நவ. 05

சபுகஸ்கந்த, மாபிமபிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த பயண பையிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ள பெண் யார் என்பது இதுவரையில் அடையாளம் காணப்படவில்லையென்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### கனேடிய பிரதமர்...

டுள்ளதாவது:

இன்று(நேற்று) கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள இந்து, ஜெயின், சீக்கிய மற்றும் பௌத்த சமூகங்களுடன் இணைந்து தீபத் திருவிழாவான தீபாவளியைக் கொண்டாடுகிறோம்.

இந்த மகிழ்ச்சியான பண்டிகை இருளின் மீது ஒளியின் வெற்றியைக் கொண்டாடுகிறது. சுதந்திரம், நம்பிக்கை மற்றும் அறிவு ஆகியவற்றின் சக்தியாக இந்தப் பண்டிகை உள்ளது.

இந்த சிறப்பு சந்தர்ப்பத்தில் குடும்பங்களும் நண்பர்களும் பொதுவாக விருந்து பசாரங்களுடன் பரிசுகளை பரிமாறிக் கொள்வர். அத்துடன் பிரார்த்தனைகளில் ஒன்று கூடுவார்கள். தங்கள் வீடுகளில் தீபங்களால் விளக்கேற்றுவார்கள்.

ஒருவரையொருவர் நம்மையும் நமது சமூகங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க பொதுச் சுகாதார வழிகாட்டுதல்களை இந்த ஆண்டும் நாங்கள் தொடர்ந்து பின்பற்றுவதால் மக்கள் இந்த மகிழ்ச்சியான பண்டிகையை வீடுகளில் அமைதியாகக் கொண்டாடுவார்கள் என்பதை நான் அறிவேன். தீபாவளி என்பது பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதற்கும், வலுவான மற்றும் துடிப்பான சமூகங்களை உருவாக்குவதற்கும் உதவும் ஒரு வாய்ப்பாகும்.

அனைத்து கனேடியர்கள் சார்பாக, சோபியும் நானும் கனடாவிலும் மற்றும் உலகம் முழுவதும் தீபாவளியைக் கொண்டாடும் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்-என்றுள்ளது.

### மேலும் 15 பேர்...

தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13,806.ஆக அதிகரித்துள்ளது.

### ஞானசாரர்...

தாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே, இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறும் ஆயர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது

செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டவரின் கடந்த காலங்களை கருத்திற் கொள்ளாமல் தமிழ், இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவத்தை வழங்காது, இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதால் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுள்ளதாகவும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை குறிப்பிட்டுள்ளது.

சட்டத்தின் முன்பாக, சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்படும் அரசமைப்பு உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அறிக்கையூடாக கோரிக்கை விடுத்துள்ளது.

# அரையிறுதி வாய்ப்பை பலப்படுத்தியது ஆஸி.!

டுபாய், நவ. 05

அடம் சம்பாவின் சிறப்பான பந்துவீச்சால் 73 ஓட்டங்களுடன் பங்களாதேஷ் அணியை சுருட்டிய அவுஸ்திரேலிய அணி, 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது. மிகப்பெரிய இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிக்கான வாய்ப்பை அவுஸ்திரேலியா பலப்படுத்தியுள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றில் நேற்று அவுஸ்திரேலியா - பங்களாதேஷ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டுபாயில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அடம் சம்பாவின் சிறப்பான பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாத பங்களாதேஷ் அணி 15 ஓவர்களில் 73 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியின் சார்பில் சமீம் ஹூசைன் பெற்ற 19 ஓட்டங்களே வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டமாக அமைந்தது.

அவுஸ்திரேலியாவுக்காக பந்துவீசிய அடம் சம்பா 5 விக்கெட்களையும், மிற்செல் ஸ்ரார்க், ஹசல்வூட் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வெறுமனே 6.2 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டுமே இழந்து 78 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

அரோன் பின்ஞ் 40, டேவிட் வோர்ணர் 18, மிற்செல் ஸ்ரார்க் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியின் நாயகனாக அடம் சம்பா தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் நிகர ஓட்டவிகித்தை அதிகரித்த அவுஸ்திரேலிய அணி குழு 1இற்கான புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இங்கிலாந்து அணி முதல் அணியாக அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்துள்ளது. இந்தநிலையில், அரையிறுதிக்குள் நுழைவதற்கான வாய்ப்பில் சமபுள்ளிகளுடன் (6 புள்ளிகள்) உள்ள அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகளுக்கு இன்னஷுமும் தலா ஒரு போட்டி மட்டுமே மீதமிருக்கும் நிலையில் கடும் போட்டி நிலவி வருகின்றது. என்பதும் குறிப்பிடத்தக்கது.




# இலங்கை அபார வெற்றி!

## அரையிறுதி வாய்ப்பை இழந்தது மேற்கிந்தியா

பதும் நிஷங்க, சரித் அசலங்கவின் அரைச் சதங்களின் உதவியுடன் நடப்பு சம்பியனான மேற்கிந்தியத் தீவுகளை 20 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது இலங்கை அணி.

இந்தத் தோல்வியால், மேற்கிந்தியத் தீவுகள் அணி அரையிறுதி வாய்ப்பை முற்றாக இழந்தது. ஏற்கனவே அரையிறுதி வாய்ப்பை இழந்து விட்ட இலங்கை அணி வெற்றியுடன் தொடரை விட்டு நீங்கியது.

இருபது - 20 உலகக் கிண்ணத்தில் அபுதாபியில் நேற்றிரவு இலங்கை - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 20 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து 189 ஓட்டங்களைக் குவித்தது.





இலங்கை அணிக்கு பதும் நிஷங்க, அசலங்க நம்பிக்கை கொடுத்தனர். கடந்த தொடர்களில் அதிகம் பிரகாசிக்காத இவர்கள் உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் இலங்கை அணியின் நம்பிக்கை வீரர்களாக உயர்ந்துள்ளனர்.

மூன்றாவது அரைச்சதத்தை இந்தப் போட்டியில் அடித்த அசலங்க, தேர்ந்த ஒரு துடுப்பாட்ட வீரருக்குரிய ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். அவரின் ஆட்டமுறைமை ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. 41 பந்துகளை சந்தித்த அவர் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 68 ஓட்டங்களை குவித்தார்.

தொடக்கவீரராக களமிறங்கிய பதும் நிஷங்க 41 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகளுடன் 51 ஓட்டங்களை சேர்த்தார். பதும் நிஷங்க - சரித் அசலங்க இணை 61 பந்துகளில் 91 ஓட்டங்களை சேர்த்து ரசிகர்களின் கவனத்தை பெற்றது. இலங்கை அணியின் எதிர்கால நட்சத்திரங்களாக அவர்கள் மிளிர்வதற்கான வாய்ப்பை இந்தப் போட்டி ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அணியின் மற்றொரு தொடக்க வீரரான குஷல் பெரேரா 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 29 ஓட்டங்களை எடுத்திருந்தார். அணித் தலைவர் தசூன் சானக 14 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 25 ஓட்டங்களை எடுத்தார். இந்தத் தொடரில் அவரின் மூன்றாவது அதிகூடிய ஓட்டம் இதுவாகும்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் அந்த்ரே ரஸல் 2 விக்கெட்களையும் கிரன் பொலார்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது மேற்கிந்தியத்தீவுகள் அணி. ஆனால், 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 169 ஓட்டங்களையே பெற்றது அந்த அணி.

மேற்கிந்தியாவுக்காக சிம்ரொன் ஹெட்மேயர் 4 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 54 பந்துகளில் 81 ஓட்டங்களை குவித்தார். நிக்கோலஸ் பூரண் ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 46 ஓட்டங்களை எடுத்திருந்தார். மற்ற வீரர்கள் எவரும் பெரிதாக சோபித்திருக்கவில்லை.

இலங்கை அணிக்காக பந்துவீசிய பினுர பெர்னாண்டோ, சாமிக கருணாரத்ன, வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், துஷ்மிந்த சாமீர, தசூன் சானக ஒரு விக்கெட்டையும் பெற்றனர். போட்டியின் நாயகனாக சரித் அசலங்க தெரிவானார்.

(ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- மாசிலா, வேலையில்லை பட்டதாரி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்